பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 78

புதன்கிழமை
12 பெப்ரவரி 2025

தை 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## ஊடகங்களுக்கு பொலிஸார் கெடுபிடி!

யாழ். பெப். 12
யாழ்ப்பாணம் - தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதிக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்குபொலிஸார் நேற்றுக் கடுமையான கெடுபிடிகளை வழங்கியுள்ளனர்.
திஸ்ஸ விகாரையின் முன்பகுதிக்கு செய்தி சேகரிக்கவும், ஒளிப்படம் எடுக்கவும் செய்தியாளர்கள் 15



திஸ்ஸ விகாரை விவகாரம்

பந்தய ஓட்டம்

## இ.போ.ச. - தனியார் பேருந்துகள் விபத்து

யாழ்ப்பாணம், பெப். 12
பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த இ.போ.ச. பேருந்தும், தனியார் பேருந்தும் நேற்று மாலை விபத்துக்குள்ளாகியுள்ளன. 15

# எமது காணிகளே எமக்குத் தேவை!

பொதுமக்கள் நேற்றுப் போராட்டம் இன்றும் தொடருமென அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 12

**யாழ்ப்பாணம் - தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தியும், காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று குறிப்பிட்டும் நேற்றுப் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.** 15

## பயங்கரவாதச் சட்டம் நீக்கப்படுவது உறுதி

அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவென அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 12
பயங்கரவாதத் தடைச்சட்டம் நிச்சயம் நீக்கப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியுடன் உள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். 15

## எரிவாயு விலை: மாற்றம் இல்லை


கொழும்பு, பெப். 12
சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள போதிலும், நாட்டில் 15

கொல்லப்பட்ட ஊடகர்களுக்கு

## நீதி வழங்கப்படும்!

அமைச்சர் நளிந்த அறிவிப்பு

கொழும்பு, பெப். 12
ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கு நிச்சயம் நீதி வழங்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், 15



## நல்லூரான் தெற்குவாசல் நேற்றுத் திறந்துவைப்பு!

யாழ்ப்பாணம், பெப். .12
வரலாற்றுப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தெற்கே உள்ள கோவில் வீதியில் அமைக்கப்பட்ட அலங்காரத் தோரண வாசலான 'நல்லூரான் தெற்கு வாசல் வளைவு' நேற்றுத் 15

## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியா, பெப். 12
வவுனியா பசார் வீதியில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் இருந்து குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
வவுனியா,பசார் வீதியில் அமைந்துள்ள நகைப்பட்டறை ஒன்றில் தொழில் புரிந்துவரும் 15

## கஜேந்திரகுமார் எம்.பி.க்கு நீதிமன்று அழைப்பாணை

போலித் தகவலை அடிப்படையாக வைத்து பொலிஸார் மிக மோசமான நடவடிக்கை!

யாழ்ப்பாணம், பெப். 12
தையிட்டி விகாரையை இடிக்க வருமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொதுமக்களுக்கு அழைப்பு விடுப்பது போன்று சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட போலியான தகவலை அடிப்படையாக வைத்து, 15




'இரவல் கடலில மீன் பிடிக்கிறதுக்கு எவ்வளவு திமிரோட கேக்கிறார் பார்த்தியளே'

இலங்கைக் கடற்பரப்பில்

## வாரத்தில் மூன்று நாள்களில் மீன்பிடிக்க அனுமதி தேவை!

தமிழக காங்கிரஸ் வலியுறுத்து

சென்னை, பெப். 12
வாரத்தில் மூன்று நாள்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு தமிழக மீனவர்களை அனுமதிக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸின் தலைவர் கு.செல்வப்பெருந்தகை கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வாழ்வாதாரத்துக்காக மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ச்சியாகக் கைது 15

## பலஸ்தீனத்துக்காக குரல்கொடுப்போம்

அரசாங்கம் உறுதி



கொழும்பு, பெப். 12
பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக இலங்கைதொடர்ந்து குரல் கொடுக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்கத்தகவல்திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. 15

காங்கேசன்துறை – நாகபட்டினம்

## கப்பற்சேவை இன்றில்லை!

யாழ்ப்பாணம், பெப். 12
காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான பயணிகள் கப்பற்சேவை இன்று இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பற்சேவை காலநிலை 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 11.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3986 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 30 31 58 72 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 11.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1053 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 22 23 40 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 11.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0012 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 5 2 8 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 11.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2092 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 06 12 15 22 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 11.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5744 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 9 0 3 3 3 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 11.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1774 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 05 15 16 71 |
| விசேட எழுத்து | D |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 11.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 319 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 3 3 3 6 |



# யோஷிதவின் பாட்டிக்கு பயணத் தடை


கொழும்பு, பெப்.12
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்சவின் பாட்டி டெய்வி பொரெஸ்ட் விக்கிரமசிங்கவுக்கு கடுவலை நீதவான் நீதிமன்றம் வெளிநாட்டுப் பயணத்தடையை விதித்துள்ளது.
சட்டவிரோதப் பணப்பரிமாற்றம் தொடர்பிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (எ-இ)

# பரந்தனில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, பெப். 12
கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் நேற்று இரவு ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.
கிளிநொச்சியிலிருந்து பரந்தன் பக்கம் நடந்து சென்ற ஒருவரை அதே திசையில் வந்த தனியார் பேருந்து மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் விசாரணை களை மேற்கொண்டுவருகின்றனர். (ம-113)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 23 | | 07 |
| 03 | | 02 |
| 1942 | | 2025 |



## திரு.இளையப்பு கார்த்திகேசு

யாழ்ப்பாணம் பணிக்கர்வளவு பலாலிவீதி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெஹிவளை வின்சர் அவனியூவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளையப்பு கார்த்திகேசு அவர்கள் 07.02.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையப்பு - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் விஜிதன். வினோதன். நாகநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரஞ்சனா. பவதாரணி. சாய்ஜெயராம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிருந்தன். டிவியா. அகனியா. ஆதித்தியா. லக்ஷன். லக்ஷனா. அமித்தேஷ். அபிநயா. அகஷ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும்
காலஞ்சென்றவர்களான சின்னத்துரை. சிவகுருநாதன். மாணிக்கம். சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 12.02.2025 புதன்கிழமை காலை 10.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 13.02.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணி முதல் நடைபெற்று பிற்பகல் 12.30 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல் : குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு : நந்தினி - 076 2441955 (மகள்)
விஜி - 004915206383745 (மகன்)
விந்தன் - 0041788248849 (மகன்)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 11.02.2025 | செவ்வாய்க்கிழமை | 0452 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| Q | 3 1 0 2 5 7 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.02.2025 | செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2718 | E | 13 17 72 76 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.02.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 20 33 39 61 | 4879 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 11.02.2025 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0620 | 19 20 40 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.02.2025 | செவ்வாய்க்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♎ | 10 16 43 59 | 4430 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 11.02.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 05 | 20 53 59 75 | 1894 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.02.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 02 04 06 21 | 2544 |

# சட்டமா அதிபரின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்த முடியாது

## பொங்குகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, பெப்.12
சட்டமா அதிபரின் நிலைப்பாட்டைச் சவாலுக்குட்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை உயர்நீதிமன்றத்தில் மாத்திரமே சவாலுக்குட்படுத்த முடியும் என்று பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
படுகொலை செய்யப்பட்ட பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் வழக்கில் சந்தேகநபர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த மூவரை வழக்கில் இருந்து விடுவிக்க சட்டமா அதிபர் எடுத்த தீர்மானம் தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. சட்டமா அதிபரை அச்சுறுத்தி சட்டத்தின் ஆட்சியை மலினப்படுத்த வேண்டாம். சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை நாட்டு மக்கள் உட்பட எவரும் உயர்நீதிமன்றத்தின் ஊடாகவே சவாலுக்குட்படுத்த முடியும். இவ்வாறான அசாதாரண செயற்பாடுகளினால் அவர் அச்சமடைந்தால் சட்டத்தின் ஆட்சி மலினப்படுத்தப்படும் என்றார். (எ-33)

# யாப்பு உருவாக்கத்தின் தாமதம் ஜனாதிபதியின் பெயரைக் கெடுக்கும்

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.12
புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பது இலகுவானதொரு விடயமல்ல. இருப்பினும் ஏற்கெனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்குரிய காலவரையறையொன்றை நிர்ணயித்து உரிய நகர்வுகளை ஆரம்பிக்கவேண்டும். யாப்புருவாக்கச் செயன்முறையை அநாவசியமாகத் தாமதப்படுத்துவது ஜனாதிபதியின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும். இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
இலங்கையை புதுயுகத்தை நோக்கிப் பயணிக்கச் செய்வதற்கு அரசியலமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்வது மிக அவசியமென நாம் உறுதியாக நம்புகிறோம். அரசியலமைப்பு மறுசீரமைப்புச் செயன்முறையானது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகக் கோட்பாடுகளுக்கமைவாகவும், இந்த நாட்டின் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தக்கூடியதுமான விதத்தில் அமையவேண்டுமென எதிர்பார்க்கிறோம். மாதுலுவாவே சோபித தேரரால் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் உருவாக்கப்பட்டதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றான நாட்டுக்கு நன்மையளிக்கக் கூடிய புதிய அரசியலமைப்பை உருவாக்குவதை முன்னிறுத்தி நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றத் தயாராகவிருக்கிறோம் என்றுள்ளது. (எ-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிதித் தூய்தாக்கலைத் தடுக்க புதிய செயலணி ஆரம்பம்

கொழும்பு,பெப்.12

**நிதித் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கான நிதிப்பங்களிப்பைத் தடுப்பதற்கான செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் புவனேக அலுவிகார தலைமையில் இந்தச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.**

இந்தச்செயலணியின் ஏனைய உறுப்பினர்களாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, தொழில் மற்றும் பொருளாதார பிரதியமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதித் திட்டமிடல் பிரதியமைச்சர் ஹர்சன சூரியப்பெரும உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் நெலுமினி தவுலகல, நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஏ.கே.டி.டி.டி. அரந்தர ஆகியோரும் செயலணியில் அங்கம் வகிக்கின்றனர். (எ-33)




பாத்திரமறிந்து பிச்சை இடு எண்டு முந்தின ஆக்கள் அடிக்கடிச் சொல்லுவினம். என்னதான் இரக்ககுணத்தில ஆக்களுக்கு குடுக்க நினைச்சாலும், பொருத்தமான ஆக்களுக்கு அதைக் குடுக்காட்டி அதில பிரியோசனமில்லாமல் போடும். நிவாரணம், உதவிப்பொருள்களைக் குடுக்கேக்கையும் இதுகளைப் பார்த்துத்தான் குடுக்கோணும். இல்லாட்டி தேவைப்பாடு உள்ளவைக்கு ஒண்டும் கிடைக்காமல் இருக்க, எல்லாம் இருக்கிற வைக்கே திரும்பத் திரும்பக் குடுத்தால் அந்த உதவிக்கே அர்த்தமில்லாமல் போடும்.

பக்கத்து நாட்டுக்காரர் எங்கட மீனவர்களுக்குக் கிட்டடியில வலையள் , மீன்பிடிச் சாமான்கள் எண்டு சில பொருள்கள் குடுத்தவை. இப்பிடி அவை உதவினதுக்கு ஏதும் உள்நோக்கமும் இருக்கலாம். இந்திய மீனவரோட வீணா முட்டுப்படாமல் இருங்கோ எண்டதும் இப்பிடிப் பொருள் குடுத்ததின்ர நோக்கமா இருக்கலாம். அப்பிடியில்லையெண்டால், இந்திய மீனவர் வாறதால வலையள் தங்கட அறுபட்டு வாழ்வாதாரமே இல்லாமல் போட்டுது எண்டு சொல்லுற தமிழ் மீனவர்களுக்குத் தேவையான பொருள்களைத் குடுத்து பிராயச்சித்தம் தேடுற வேலையாவும் இருக்கலாம். எதெண்டாலும், இப்பிடி மீனவர்களுக்கு உதவி செய்யோணும் எண்டு யோசிச்சதே பெரிய புண்ணியம் தானே. ஆனால் அவையளும் சரியான ஆக்களுக்குத்தான் உப்பிடியான வலையளைக் குடுத்தவையோ எண்டும் டவுட்டா இருக்கு.

நெடுந்தீவில இப்பிடி பக்கத்துநாட்டுத் தூதரகக்காரர் வலையள் குடுத்தவை. ஆனால் அவையிட்ட கைநீட்டி வலையளை வாங்கின சிலர் அந்த வலையளை அடுத்த நாளே வித்திட்டினமாம். காசுக்கஷ்டத்தில இப்பிடி விக்கேலையாம். அவையிட்ட தேவையான வலையள் இருக்கு. அப்ப இந்தப் புதுவலையை வைச்சிருக்கிறதை விட, வித்தாலாவது லாபம் வரும் எண்டுதான் இப்பிடிச் செய்தவையாம். ஆனால் அதே ஊரில வலையள் இல்லாததால தொழிலுக்குப் போகமுடியாமலும் சில குடும்பங்கள் கஷ்டப்படுகுதுகள். அவைக்கு இந்த வலையளைக் குடுத்திருந்தால் உண்மையில பிரியோசனப்பட்டிருக்கும். ஆனால் தேவையில்லாத சிலருக்கு இப்பிடி வலையளைக் குடுத்ததால பக்கத்துநாட்டுக்காரர் செய்த உதவிக்குப் பெறுமதி இல்லாமல் போட்டுது எண்டு அந்த ஊர்க்காரரார் கதைக்கினம். இனியாவது ஆருக்கு என்ன உதவி செய்யோணும் எண்டு வடிவா அறிஞ்சு செய்தால் நல்லம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

## டொன் பிரியசாத் நேற்றுக் கைது

கொழும்பு. பெப். 12

சிங்களத் தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் டொன் பிரியசாத், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை டுபாயில் இருந்து நாட்டுக்கு வந்தபோதே அவர் விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

2024 ஆம் ஆண்டு போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரைக் கைது செய்ய வேண்டாம் என்று நானேரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அழுத்தம் கொடுத்தார் என டொன் பிரியசாத்துக்கு எதிராக நிகவரெடிய குற்றப் புலனாய்வுப் பணியகம் விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கல்கமுவ நீதவான் நீதிமன்றம் டொன் பிரியசாத்துக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத்தடையையும், அவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான பிடியாணையையும்
பிறப்பித்திருந்தது. அதையடுத்தே இலங்கை வந்த டொன் பிரியசாத் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-25)

## மூன்றுலட்சம்பேருக்கு இவ்வாண்டு பணிவாய்ப்பு

கொழும்பு,பெப்.12

2025ஆம் ஆண்டு 3 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. சவூதி அரேபியாவுக்கு 52 ஆயிரம் பேரும், குவைத்துக்கு 84 ஆயிரம் பேரும், ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு 55 ஆயிரம் பேரும், இஸ்ரேலுக்கு 15 ஆயிரத்து 900 பேரும், ஜப்பானுக்கு 9 ஆயிரம் பேரும், கொரியாவுக்கு 8 ஆயிரம் பேரும் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லவுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. இவர்களில் 25 வீதமானோர் மட்டுமே சாதாரண தொழிலார்களாகச் செல்லவுள்ளனர். ஏனைய 75 வீதமானோர் திறன்சார் தொழிலாளர்களாகச் செல்லவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-33-6)



ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, டுபாயில் உள்ள ஜுமேரா பீச் ஹோட்டலில் மாஸ்டர் இன்வெஸ்ட்மென்ட் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், ராஸ் அல் கைமா ஆட்சியாளரின் மருமகனுமான ஷேக் அப்துல்லா பின் முஹம்மது அல் காசிமியை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (எ-இ)

# சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலக உருவாக்க நடவடிக்கைகள் ஆரம்பம்!

### தேசிய ஒருமைப்பாடு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, பெப்.12

தேசிய மக்கள் சக்தியின் 'வளமான நாடு, அழகான வாழ்க்கை' எனும் கொள்கைப்பிரகடனத்தில் கூறப்பட்டிருந்தவாறு 'சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம்' ஒன்றை உருவாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக முதற்கட்டமாக விசேட நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், இந்தக் குழுவில் சட்டமா அதிபர் அல்லது சட்டமா அதிபரால் பெயரிடப்படும் பிரதிநிதிகள் இருவர், நீதியமைச்சின் செயலாளர், நீதிமன்ற சேவை தொடர்பில் போதிய தெளிவுடைய நீதியரசர் ஒருவர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அல்லது அவரால் பெயரிடப்படும் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் உள்ளடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவானது சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்தை உருவாக்குவதற்கான ஆரம்பகட்டச் செயற்திட்டத்தை வகுக்கும். அந்தச் செயற்திட்டத்தின் அடிப்படையில் சட்டவரைபொன்று தயாரிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பில் பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஆலோசனைகளைக் கேட்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## இன்றைய

**மேடம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் நலனில் கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு ஒன்றை துணிந்து எடுப்பீர்கள். அது சாதகமாகவே முடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்

**கடகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் சாதகமாக முடிந்துவிடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**கன்னி:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு பணியின் காரணமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடுவதுடன் அதனால் ஆதாயமும் உண்டாகும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்களுக்குத் தேவையில்லாத விஷயங்களில் தலையிடவேண்டாம். உறவினர்கள் கடுமையாகப் பேசினாலும் பொறுமை காப்பது அவசியம்.

**விருச்சிகம்** : எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

**தனுசு:** புதிய முயற்சிகளையும் பயணங்களை யும் தவிர்க்கவும். உறவினர்களிடம் பேசும் போது நிதானம் அவசியம். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** உற்சாகமான நாளாக இருக்கும். திடீர் பொருள்வரவு மகிழ்ச்சி தரும். எதிர்பார்த்த காரியம் சற்று தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்குவது நல்லது.

**கும்பம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**மீனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்களைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

# தென்னைச் செய்கைச் சபை வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப்.12

வடக்கு மாகாணத்துக்கு வந்திருந்த தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் தலைமையிலான குழு, வடக்கு ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

சபையின் தலைவர் சுனிமல், சபையின் பொது முகாமையாளர் விஜயசிங்க தலைமையிலான இந்தக் குழுவுடன் நடந்த சந்திப்பில் வட மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ. சிறீ, வட மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு. செந்தில்குமரன், யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி எஸ். அஞ்சனாதேவி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வட மாகாணத்தில் தென்னை முக்கோண வலயத்தை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும், இந்த ஆண்டு ஒரு மில்லியன் தென்னங் கன்றுகளை 16 ஆயிரம் ஏக்கரில் நடுகை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர், அதற்குரிய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள் ளார்.

அனுமதிக்கப்பட்ட சில வகையான உரங்களைப் பயன்படுத்துவதன் ஊடாகவே தென்னை மரங்கள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறுகின்றன என்று சுட்டிக்காட்டிய சபையின் தலைவர், அதன் ஊடாகவே கூடியளவான உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் திட்டங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று வடக்கு ஆளுநர் இந்தச் சந்திப்பில் உறுதியளித்துள்ளார். (எ-25,66)

## வீதியோட்டம்

சாவகச்சேரி, பெப்.12

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டிகளின் சிறப்பு நிகழ்வான வீதியோட்ட நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆண்களுக்கான வீதி ஓட்டம் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு புத்தூர்ச் சந்தி ஊடாக கனகம்புளியடிச் சந்தி வழியாகவும் பெண்களுக்கான வீதி ஓட்டம் கனகம்புளியடிச் சந்தியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு சாவகச்சேரி நகர் ஊடாக நடைபெற்று பாடசாலை முன்பாக நிறைவுசெய்யப்பட்டது. (எ-25,28)

## ஆசிரியர் கலாசாலைக்கு அமைச்சர் திடீர் பயணம்

யாழ்ப்பாணம், பெப்.12

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு நேற்றுமுன்தினம் மாலை திடீர் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

கலாசாலையின் செயற்பாடுகள் தொடர்பாக கலாசாலையின் முதல்வர் ச. லலீசனிடம் கேட்டறிந்ததுடன், கலாசாலையின் சுற்றுப்புறச் சூழலையும் பார்வையிட்டார். (எ-22,66)

கொக்குவில் பொற்பதி சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில், குருதிக்கொடை முகாம் நிகழ்வு கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள தனியார் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. (எ-25,66)



## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.12

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் மாதாந்தப் போயாக் கருத்துரையும் கலந்துரையாடல் நிகழ்வும் தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் வே. சேந்தன் தலைமையில் கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இன்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் சமூக விஞ்ஞான, கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளமுடியும் என்று சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (எ-22,66)

## மன்னார் நீதிமன்ற துப்பாக்கிச் சூடு சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு!

மன்னார், பெப்.12

மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

7 சந்தேகநபர்களில் 5 சந்தேகநபர்கள் ஏற்கனவே அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஏனைய இரு சந்தேகநபர்களுக்கு ஆள் அடையாள அணிவகுப்புகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெறவிருந்தன. ஆயினும் அடையாளத்தைக் காண்பிப்பதற்காக வர இருந்த இருவரும் மன்றில் முன்னிலையாகவில்லை. அதையடுத்து சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (எ-25,56)

## கலஹா மலைப்பகுதியில் தீப்பரவல்

கொழும்பு, பெப்.12

பேராதனைகலஹா வீதியில் உள்ள மலைப்பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. பேராதனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலஹாகண்டி பிரதான வீதியில் உள்ள ஹல்ஒய 9ஆவது தூண் பகுதியில் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. பைனஸ் வனப்பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது என்றும் தற்போது அது பரவலாகப் பரவிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஆபத்துகளை எதிர்கொள்ளாமல், உயர்ந்த விடயங்களை ஒருபோதும் அடையமுடியாது.

– நிக்கோலோ மச்சியாவெல்லி –

# வேலிகள் பயிரை மேயாதிருக்குமா?

போதைப்பொருள் பாவனையின் காரணமாக 17 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடந்த நான்கு மாதங்களில் பணிநீக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியிருக்கின்றார். இவர்கள் ஹெரோய்ன், ஐஸ் போன்ற போதைப்பொருள்களை நுகர்கின்றமை மருத்துவப் பரிசோதனைகளின் ஊடாக உறுதிசெய்யப்பட்ட பின்னரே, பணியில் இருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர். முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கை வரவேற்கப்பட வேண்டியது.அதேநேரம், நாட்டில் இருந்து போதைப்பொருளை ஒழிப்பதற்கு இதுபோன்ற பாரபட்சமில்லாத நடவடிக்கைகளே மிகத் தேவையானவை.இன்னொரு வகையில் பார்த்தால்,போதைப்பொருள் ஒழிப்பில் பிரதான பங்காற்ற வேண்டிய பொலிஸ்துறையைச் சேர்ந்தவர்களே போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியிருப்பதும் மிகவும் அதிர்ச்சியான விடயம்தான்.

இலங்கையில் போதைப்பொருள் பாவனை ஒரு கடுமையான சமூகப் பிரச்சினையாக மாற்றமடைந்திருக்கின்றது. முக்கியமாக போதைப்பொருள்களின் பாவனை மற்றும் பரவல் நாட்டின் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்திருக்கின்றது. இது சமூக, பொருளாதார மற்றும் சுகாதாரத்துறைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் அதேநேரம், எதிர்காலத்தில் பெரும் சமூகச் சிக்கல்களையும் ஏற்படுத்தும் என்பது திண்ணம். இலங்கை அரசாங்கம் போதைப்பொருள் ஒழிப்புக்காகவும், கட்டுப்பாட்டுக்காகவும்பல்வேறு திட்டங்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தாலும் போதைப்பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்த முடியாமைக்குக் காரணம் போதைப்பொருள் வியாபாரிகளுக்குக் கிடைக்கும் மறைமுக அரசியல் அனுசரணை மற்றும் பொலிஸ் ஆதரவு என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

போதைப்பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய பிரதான துறையான பொலிஸ்துறையில் போதைக்கு அடிமையானவர்கள் இருப்பதும், போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்புகளைப் பேணுவோர் இருப்பதுமே இலங்கையில் போதைப் பொருள் வியாபாரம் அகலக்கால் பரப்பி வியாபித்திருப்பதற்கான பிரதான காரணங்களில் ஒன்று. பொலிஸ் துறையில் இருந்து போதைப்பொருள் வியாபாரிகளுக்குக் கிடைக்கும் ஒத்துழைப்பு நீடிக்கும்வரையில் அரசாங்கம் எத்தனை நடவடிக்கைகள் எடுத்தாலும் - எத்தனை திட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும் போதைப் பொருளை நாட்டில் இருந்து அகற்றவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. நாட்டில் இருந்து போதைப்பொருளை ஒழிக்கவேண்டுமானால் முதலில் பொலிஸ்துறையைச் சுத்தப்படுத்த வேண்டியது அவசியம்.

பொலிஸ் சேவையில் உள்ளவர்களில் போதைப்பாவனைக்கு அடிமையானவர்கள் இனங்காணப்பட்டு சேவையில் இருந்து நீக்கப்படுவதுடன், போதைப்பொருள் வியாபாரிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பவர்களை இனங்காண்பதும் முக்கியமானது. முறைப்பாடுகளின் அடிப்படையில் மட்டும் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, கிரமான முறையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுத்தப்படும் பொறிமுறை ஒன்றைக் கொண்டு வருவதற்குரிய திட்டங்களை அரசாங்கம் ஆராய வேண்டும். அவ்வாறு ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்டால் பொலிஸ் சேவையில் இருப்பவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகும் வீதமும் வெகுவாகக்குறையும். நாட்டிலிருந்து போதைப்பொருள் துடைத்தெறியப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லாதநிலையில், பொலிஸ் துறையில் அதற்கான அத்திபாரத்தை இடுவது முக்கியமானது என்பதை அரசாங்கம் புரிந்துகொண்டு அதற்கான திட்டங்களை வகுப்பது அவசியம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## ஐ.எம்.எப். குழுவினருடன் பிரதமர் கலந்துரையாடல்!

கொழும்பு, பெப்.12

சர்வதேசநாணயநிதியத்தின்நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஸ்ணமூர்த்தி சுப்ரமணியனுக்கும், பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் வரிக் கொள்கை, வரி வருவாயைத் திறம்பட நிர்வகிப்பது மற்றும் அரசாங்கத் துறையின் செயற்றிறனை அதிகரிப்பது தொடர்பாகக் கவனம்செலுத்தப்பட்டது என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ-இ)



## திறைசேரி உண்டியல்கள் ஏலம்

கொழும்பு, பெப்.12

157,500 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களின் ஏலம் நேற்று நடைபெற்றது. 91நாள்களில் முதிர்ச்சியடையும் 27,500 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்களில் முதிர்ச்சியடையும் 55,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்களில் முதிர்ச்சியடையும் 75,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலம் விடப்பட்டுள்ளன. (எ-இ)

## மீண்டும் நிறுவப்படவுள்ள நிதிக்குற்றபுலனாய்வுப் பிரிவு

கொழும்பு, பெப்.12

நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு, சட்டவிரோதச் சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவு மற்றும் மத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றை நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வுப் பிரிவின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இதேவேளை, நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவை மீள நிறுவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி விரைவில் வெளியாகும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் தெரிவித்துள்ளார். (எ-இ)

## புதுமணத் தம்பதிகளுக்கு வீட்டுக் கடன்!

கொழும்பு, பெப்.12

புதிதாகத் திருமணமான தம்பதிகளுக்கு வீடுகட்ட கடன்வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த நகர்ப்புற மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி மேம்பாட்டு அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த வீட்டுத்திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்படும். வீடுகட்டுவதற்கு எவ்வளவு தொகை வழங்கப்படும் என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். (எ-இ)



## போதைப்பாவனையால் 17 பொலிஸார் பணிநீக்கம்


ஹெரோயின் மற்றும் ஐஸ் போன்ற போதைப்பொருள் பாவனை காரணமாகக் கடந்த 4 மாதங்களில் 17 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணிநீக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் பிரிவில் போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் என்று சந்தேகிக்கப்படும் அதிகாரிகளின் பட்டியலை புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு தொகுத்துள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் எஸ்.எஸ்.பி புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். அந்த அதிகாரிகள் பரிசோதிக்கப்பட்டு மருத்துவ அறிக்கைகள் தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு சபைக்கு அனுப்பப்பட்டன. அதன் முடிவுகளைத் தொடர்ந்து, அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

நாளை
வியாழக்கிழமை - மாசி - 01
13.02.2025
சுபநேரம் : 08.04 - 09.34
ராகுகாலம் : 02.04 - 03.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்வெட்டு இனியில்லை

## மின்சாரசபை நேற்று அறிவிப்பு



**கொழும்பு, பெப்.12**

**எதிர்வரும் நாள்களில் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படாது என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.**

மின்வெட்டை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட திடீர் மின் தடையைத் தொடர்ந்து நுரைச்சோலை மின்நிலையத்தில் உள்ள 3 மின்மாற்றிகள் செயலிழந்தன.

அதையடுத்து மின்தேவையை நிர்வகிக்கும் பொருட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் நாடு முழுவதும் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையிலேயே எதிர்வரும் நாள்களில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று மின்சார சபை நேற்று அறிவித்துள்ளது. (எ-இ)

## விவசாயப் பாதிப்புகளுக்கான நட்டஈடு வழங்கல்கள் ஆரம்பம்

கொழும்பு, பெப்.12

கடந்த வருடம் நவம்பர் மாதம் 26ஆம் திகதி முதல் ஏற்பட்ட வெள்ளநிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயச் செய்கைகளைப் பரிசோதித்து நட்டஈடு வழங்கும் செயற்பாடு தற்போது ஆரம்பமாகியுள்ளது என விவசாய மற்றும் கமநல காப்புறுதிச்சபை தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட ஆறாயிரத்து 239 விவசாயிகளுக்காக 114 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது. வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்குக் கிடைத்த பரிந்துரை பாதிப்பு விண்ணப்பங்களுக்கமைவான இழப்பீட்டு நிதியை அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-33)



## நுவரெலியாவில் பனிப்பொழிவு!

கொழும்பு, பெப்.12

நுவரெலியாவில் தற்போது காலையில் கடும் குளிரான காலநிலை நிலவுகின்றது.

டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்கு இடையில் காலநிலை மாற்றத்துடன், நுவரெலியாவில் உறைபனிக்கட்டிகள் விழும். ஆனால் இம்முறை கடந்த காலங்களை விடவும் அதிக பனிப்பொழிவு காணப்படுகின்றது.

நேற்றுச்செவ்வாய்க்கிழமைகாலைநுவரெலியாவில் அதிக பனிப்பொழிவு காணப்பட்டது. நுவரெலியா பிரதேசத்தின் வெப்பநிலை 4 முதல் 7 பாகை செல்சியசாகக் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காலை 8.30 மணிக்கு முன்னர் கடும் குளிராகவும், மதியம் கடும் வெயிலாகவும் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## திருடர்களுடன் கூட்டுவைத்தால் அரசியல் பயணத்துக்கு ஆபத்து

### ஹிருணிகா தெரிவிப்பு

திருடர்களுடன் எந்தவிதத் தொடர்பும் இல்லை எனக் கூறிக்கொள்ளும் நாமே திருடர்களுடன் கூட்டணி அமைக்கவேண்டுமா? என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைவது தொடர்பான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது எதிர்கால அரசியல் பயணத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாகன ஐக்கிய மக்கள் சக்தி எதிர்காலத்தில் சுயாதீனமாகவும், கௌரவமாகவும் அரசியல் பயணத்தை முன்னெடுக்க வேண்டும்என்றார். (எ-33)


## பாரதியின் மறைவு ஊடகத்துறைக்கு இழப்பு

### தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம்

யாழ்ப்பாணம், பெப்.12

மூத்த பத்திரிகையாளர் இராசநாயகம் பாரதியின் மறைவு தமிழ் ஊடகத்துறைக்கு பேரிழப்பாகும். தமிழ்த் தேசியத்தின்பால் தீவிர ஈடுபாடு கொண்டு செயற்பட்ட போராளியாகவே பாரதி திகழ்ந்திருந்தார். தமிழ் கூறும் நல்லுலகத்தின் பெரும் இடைவெளியை பாரதியின் இழப்பு ஏற்படுத்தியிருக்கின்றது என்று தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

தமிழ் ஊடகத்துறையின் வளர்ச்சிக்காகவும் சுதந்திரத்துக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்திருந்த பாரதியின் மறைவுஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (எ-இ)




தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 202 குடும்பங்களுக்கு “சீனாவின் சகோதர பாசம்“ உதவித்திட்டத்தின்கீழ் உலர்உணவு பொருள்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டன. (எ-25,9)

## கிளிநொச்சி சென்ற ஜப்பானியத் தூதுவர்!

கிளிநொச்சி, பெப். 12

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகிஜோ இசோமட்டா உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் கிளிநொச்சி முகமாலைப் பகுதிக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை சென்றுள்ளனர். அங்கு நடைபெறும் கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டதுடன், கண்ணிவெடி அகற்றும் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினர். முகமாலைப் பகுதியில் ஜப்பானின் நிதிப்பங்களிப்புடன் டாஸ், கலோரெஸ்ட் மற்றும் சாப் நிறுவனங்களால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-25,214)



## உணவுப்பாதுகாப்புத் தொடர்பில் பாதுகாப்புக்குழுவினர் ஆராய்வு

கொழும்பு,பெப்.12

உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பாக உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள் ஆராய்ந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் கூடிய இந்தக் குழு தேசிய உணவுப்பாதுகாப்புக் கொள்கைக் கட்டமைப்பை நிறுவுதல், அத்தியாவசிய உணவுத்தகவல் கட்டமைப்பைப் பராமரித்தல், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் புதிய திட்டத்தை உருவாக்குதல், விஞ்ஞான பூர்வமான சான்றுகளின் அடிப்படையில் உள்நாட்டு உற்பத்திகளை அதிகரித்து விநியோகிப்பதற்கான திட்டத்தை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளது.

நெல் கொள்வனவு தொடர்பாக அங்கு விரிவாக ஆராயப்பட்டதுடன், நெல்கொள்வனவு செய்வதற்கு ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்வசதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லின் அளவைக் கண்காணிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (எ-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத தையிட்டி விகாரை அகற்றப்படவேண்டிய ஒன்றே!

## மக்கள் போராட்ட முன்னணி திட்டவட்டம்

**கொழும்பு, பெப்.12**

**தையிட்டி விகாரை சட்டவிரோதமாகவே கட்டப்பட்டுள்ளது. அதனால் அது அகற்றப்படவேண்டும் என்று மக்கள் போராட்ட முன்னணி தெரிவித்துள்ளது.**

மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான ராஜ்குமார் ரஜீவ்காந் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழர் பிரதேசங்களைக் கையகப்படுத்துகின்ற நடவடிக்கைகள் பல சந்தர்ப்பங்களில் நடந்துள்ளன. நாமும் அவற்றுக்கு எதிர்ப்பைத் தொடர்ச்சியாகப் பதிவுசெய்து வருகின்றோம்.

தையிட்டியில் தனியாருக்குச் சொந்தமான காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக ஒரு விகாரையைக் கட்டிமுடித்திருக்கின்றார்கள். இராணுவத்தினரின் உதவியுடன், இராணுவ ஆக்கிரமிப்பின் ஊடாக இந்த விகாரை கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

பௌத்த சம்மேளனம் கிட்டத்தட்ட 14 ஏக்கர் தனக்குச் சொந்தமானது என எந்த வித பொறுப்பும் இல்லாமல், ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. சட்டம் அனைவருக்கும் பொதுவானது.

சட்டம் பௌத்த பேரினவாதத்துக்கு விதிவிலக்கானது என எங்கும் குறிப்பிடப்படவில்லை.

எண்ணிக்கை அடிப்படையில் அதிகமாக உள்ளவர்கள், அரசியல் அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டு தங்களுக்குத் தேவையானது போல சட்டத்தை வளைத்துக் கொள்கின்ற நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இந்த நாட்டில் நடைபெறுகின்றன.

தையிட்டி விகாரையைப் பொறுத்தவரை அது சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ளது அது அகற்றப்படவேண்டும், அவ்வளவேதான்.

இந்த அபகரிப்புக்கும், சட்டவிரோதத்துக்கும் யாராவது ஒருவர் ஆதரவு வழங்குவாராகயிருந்தால், நாட்டின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறிக்கு உள்ளாகும், ஏனென்றால் இது இத்துடன் நின்றுவிடப்போவதில்லை என்றார். (எ-இ)

# இந்த ஆண்டு மட்டும் 13 துப்பாக்கிச் சூடுகள்

## 9 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.12

நாடளாவிய ரீதியில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கே.புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

7 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலக கும்பல்களின் தலைமையில் இடம்பெற்றுள்ளன. ஏனையவை தனிப்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்றுள்ளன.

பாதாள உலக கும்பல்களின் தலைமையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரைத் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ரி-56 ரக துப்பாக்கிகள் மூன்றும், 5 கைத்துப்பாக்கிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டன என்று கூறப்படும் 4 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றார். (எ-இ)

# துப்பாக்கியுடன் மாயமான கான்ஸ்டபிளின் பெற்றோர் கைது

கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சேவைத் துப்பாக்கி காணாமல் போன சம்பவம் தொடர்பில் அவரது தாயும் தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர். அதே வேளை, சந்தேகநபருக்கு உதவினார் என்று கூறப்படும் மற்றொரு பொலிஸ் கான்ஸ்டபிளும் கைதுசெய்யப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை, கல்கிஸ்ஸப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் தனது சேவைத் துப்பாக்கியுடன் காணாமல்போயிருந்தார். முதற்கட்ட விசாரணையில், குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் டுபாய்க்குச் சென்றுவிட்டதாகத் தெரியவந்துள்ளது. பொலிஸ் கான்ஸ்டபிள் காணாமல் போனது குறித்து விசாரணை நடத்திவரும் கல்கிஸ்ஸ குற்றப்புலனாய்வுப் பிரிவு, அந்த கான்ஸ்டபிளின் பெற்றோரைக் கைதுசெய்துள்ளது. கைதுசெய்யப்பட்ட இருவரும் நேற்று கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது 48 மணி நேரம் தடுத்துவைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதித்துள்ளது. (எ-33)

# சிலிண்டர் வெடித்து இருவர் காயம்

கொழும்பு, பெப்.12

எரிவாயுச் சிலிண்டர் வெடித்ததில் இருவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை கதிகாமத்தில் நடந்துள்ளது.

கதிர்காமம் கடற்படை விடுதியில் தங்கியிருந்த இருவர் காலை உணவு தயாரித்துக் கொண்டிருந்தபோதே சிலிண்டர் வெடித்துள்ளது. சம்பவத்தில் 32 வயதுடைய பெண்ணும், 36 வயதுடைய ஆணும் காயமடைந்துள்ளனர். இருவரும் கதிர்காமம் பிரதேச மருத்துவமனையில் சேரக்கப்பட்டுப் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக தெபரவெவ மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (எ-இ)

# வாகனங்களின் புதிய விலைகளை வெளியிட்டது டொயட்டோ லங்கா

கொழும்பு,பெப்.12

வாகன இறக்குமதித் தடை நீக்கப்பட்டபின் சந்தைக்கு வரவுள்ள வாகனங்களின் விலையை டொயட்டோ லங்கா நிறுவனம் வெளியிட்டுள்ளது.

டொயட்டா லங்கா நிறுவனம் வெளியிட்டுள்ள விலைப்பட்டியலில் டொயட்டோ லைற் ஏஸ் 7.45 மில்லியன் ரூபா, டொயட்டோ விகோ 9.15 மில்லியன்ரூபா , டொயட்டோ லைற் ஏஸ் வான் 11.4மில்லியன் ரூபா, டொயட்டோ றெயிஸ் 12.25 மில்லியன் ரூபா, டொயட்டோ சிங்கிள் கப் 15.2 மில்லியன் ரூபா, டொயட்டோ ஹைஏஸ் 19.95 மில்லியன் ரூபா, டொயட்டோ கோஸ்டர் 19.8 மில்லியன் ரூபா, டொயட்டோ யரிஸ் 18.5 மில்லியன் ரூபா, டொயட்டோ ரஷ் 17.95 மில்லியன் ரூபா, டொயட்டோ கொரலா 28 மில்லியன் ரூபா, டொயட்டோ பிரியுஸ் 28.9 மில்லியன் ரூபா, டொயட்டோ ரவ் 437.5 மில்லியன் ரூபா, டொயட்டோ கம்றி 44மில்லியன் ரூபா, டொயட்டோ லாண்ட் குறூசர் 25078 மில்லியன் ரூபா, டொயட்டோ அல்பர்ட் 73.9 மில்லியன் ரூபா, டொயட்டோ போர்டியூனர் 61மில்லியன் ரூபா, டொயட்டோலாண்ட் குறூசர் 300118 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-33-6)



# இழப்பை ஏற்படுத்தியவர்களே இழப்பீட்டை விமர்சிக்கின்றனர்

## பிரேம்நாத் சி தொலவத்த கூறுகின்றார்

கொழும்பு,பெப்.12

எமது இல்லங்களைத் தீக்கிரையாக்கி சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தவர்களை, அதற்குத் தூண்டியவர்களை நாம் இனங்கண்டுள்ளோம். அவர்களுக்கெதிராக நீதிமன்றம் சென்று அவர்களிடமிருந்து இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார். ஏற்பட்ட சேதத்தில் ஐந்தில் ஒரு பங்கு மாத்திரமே கிடைத்துள்ளது. நான் வசிப்பது 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த பரம்பரை இல்லமாகும். எனவே அது தொடர்பில் எந்த மதிப்பீடுகளை முன்னெடுத்தாலும் நான் அஞ்சப்போவதில்லை. மதிப்பீட்டு அறிக்கைகளை மறைத்துவைத்திருக்காது அவற்றை நாட்டுக்கும் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (எ-33)

# முகாம்களில் தங்கியுள்ளோருக்கு விரைவில் வீடுகள் நிர்மாணம்!

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவிப்பு

கொழும்பு,பெப்.12

மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் குடும்பங்களுக்கு விரைவாக வீடுகள் வழங்கப்படும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார். இவர்களுக்கென வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சில், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் முப்படை அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலிலே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கேகாலை மாவட்டத்தில் 22 குடும்பங்கள் மண்சரிவு காரணமாக அகதி முகாம்களில் தங்கியுள்ளன. பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்லைப் பகுதியில் 51 குடும்பங்கள் தமது பிள்ளைகளுடன் ஐந்து ஆண்டுகளாகக் கபரகலையில் மூடப்பட்ட தேயிலைத் தொழிற்சாலையில் வசித்துவருகின்றனர். இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படும். இதற்கான கட்டுமானப்பணிகள் பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சின் செலவில் மேற்கொள்ளப்படும் - என்றார். (எ-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கான உத்தரவாதவிலையை அதிகரிக்காவிடின் போராட்டம்!

## விவசாய அமைப்புகள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 12

**தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்காவிட்டால், விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று விவசாய அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.**

அண்மையில் அரசு நெல்லுக்கான உத்தரவாத விலையை ஒரு கிலோ நாட்டு நெல்லுக்கு ரூ.120, ஒரு கிலோ சம்பா நெல்லுக்கு ரூ.125, மற்றும் ஒரு கிலோ கீரிச் சம்பா நெல்லுக்கு ரூ.132 என அறிவித்தது.

உத்தரவாத விலை போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் சங்கங்களும் விவசாயிகளும் கூறி வருகின்றனர்.

அத்துடன் அரசாங்க விலைக்கு நெல்லை வழங்குவதைவிட, தனியார் ஆலை உரிமையாளர்களுக்கு நெல்லை வழங்குவது மிகவும் சாதகமாக உள்ளது.

எனவே அரசாங்கம் தற்போது அறிவித்துள்ள நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)



# புன்னாலைக்கட்டுவனில் கசிப்புக்கோட்டை முற்றுகை

யாழ்ப்பாணம், பெப். 12

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கசிப்புக்காய்ச்சி விற்பனை செய்த வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டு பெருந்தொகையான கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 30ஆயிரம் லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் வைத்து ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அந்தநபரிடம்மேற்கொண்டவிசாரணையிலேயே மேற்குறித்த கசிப்புக் காய்ச்சும் இடம் கண்டறியப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-23)



மன்னார் ரோட்டரி கழகத்தால் மன்னார் பரிகாரிகண்டல் பாடசாலையில் புதிதாக இன்டராக்ட் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதுடன் தெரிவு செய்த பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. இந்த நிகழ்வு மன்னார் ரோட்டரிக் கழகத்தின் தலைவர் தி.தனேஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-213)

# தேங்காய் விலை கிடுகிடு உயர்வு

கொழும்பு , பெப். 12

2025 ஜனவரி மாத இறுதி வாரத்தில் நாட்டில் தேங்காய் ஒன்றின் சில்லறை விலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 88 வீதத்தால் அதிகரித்துள்ளதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.தற்போது சந்தையில் பெரிய தேங்காய் ஒன்று 200 - 250 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

சிறிய தேங்காய் ஒன்று 170 - 190 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது என்று விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

2024 ஜனவரி மாதம் இறுதி வாரத்துடன் ஒப்பிடுகையில் பெரிய தேங்காய் ஒன்றின் சில்லறை விலை 78 வீதத்தாலும் சிறிய தேங்காய் ஒன்றின் சில்லறை விலை 88 வீதத்தாலும் அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)





# லீக் சுற்றுப்போட்டி; கிண்ணம் அறிமுகம்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று சென்.பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழகத்தினரின் 21 வயதுக்கு உட்பட்ட வீரர்கள் நடத்தும் சி.பி.எல் யு.21 கிரிக்கெட் தொடரின் கோப்பை அறிமுக விழாவும் சுற்றின் முதல் ஆட்டமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் செம்பியன்பற்று பிலிப்புநேரியர் ஆலயப் பங்குத்தந்தை கலந்து சிறப்பித்ததுடன் கழக உறுப்பினர்கள், பிரதேச மக்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-33-27)



# கிளிநொச்சி மத்திய கல்லூரி நுழைவு வளைவு திறப்பு

கிளிநொச்சி, பெப்.12

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதான நுழைவு வளைவு கல்லூரியின் முதல்வர் சவரி பூலோகராஜா தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட 4 மில்லியன் ரூபா செலவில் குறித்த நுழைவுவளைவு நிர்மாணிக்கப்பட்டது. நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், ஓய்வு நிலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,பழைய மாணவர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,113)

# நல்லிணக்க அடிப்படையில் போர்ச்சின்னங்கள் வேண்டாம்

## வேழமாலிகிதன் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.12

புதிய ஆட்சிமாற்றம் நிகழ்ந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இராணுவப்போர் நினைவுச்சின்னங்களை அகற்ற வேண்டும் என்று கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் மனங்களைக் காயப்படுத்துவதாக கிளிநொச்சி டிப்போ சந்தியில் இராணுவப்போர் நினைவுச்சின்னம் காணப்படுகின்றது. தற்போது ஆட்சிமாற்றம் நிகழ்ந்திருக்கின்றது. ஜனாதிபதி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கின்றார்.

அந்தவகையில் போர்ச்சின்னங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கனவை சாத்தியமற்றதாக்கும் ஒரே ஒரு விஷயம்: தோல்வி பயம்.

- பௌலோ கொய்லோ

# புதன் பொய்கை

12.02.2025
புதன்கிழமை

நிசார் முஹம்மத் நிஸ்மின்,
கல்வியியல் சிறப்பு கற்கை மாணவன்
கல்வி பிள்ளை நலத்துறை,
கிழக்கு பல்கலைக்கழகம்,

# புலமைப்பரிசில் பரீட்சையால் தடுமாறுகின்ற கல்வித்தளம்!

# தீர்வு எப்போது?



ஐந்தாம் தர புலமைப் பரீட்சை முறை, பல ஆண்டுகளாக எமது கல்விக் கட்டமைப்பில் அங்கம் வகித்துவருகிறது. அதேசமயம், இதில் குறைபாடுகளும் உள்ளன என்பது இரண்டாம் கருத்தின்றிய மறுக்க முடியாத உண்மையாகும். அவற்றை சுட்டிக் காட்டுவதும், ஆரோக்கியமான விவாதத்தை ஊக்குவிப்பதும் அவசியமாகிறது.

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்றது. அதன் முடிவுகள் கடந்த மாதம் ஜனவரி 23ஆம் திகதி வெளியிடப்பட்டன. பரீட்சையின் போது மூன்று வினாக்கள் ஏற்கனவே வெளியில் கசிந்ததாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அவற்றுக்குத் திறந்த புள்ளிகள் வழங்கப்பட்டன. இது ஒட்டுமொத்தக் கல்விக் கட்டமைப்பின் நம்பகத் தன்மையையும் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது. எல்லாவற்றையும் விட புலமைப் பரிசில் பரீட்சை என்பது அவசியம்தானா? என்ற விவாதங்கள் இப்போது பரவலாக எழத் தொடங்கியுள்ளன.

புலமைப் பரிசில் பரீட்சை என்பது உண்மையில் பிள்ளைகளின் திறமையை மதிப்பிடுவதை விட, பெற்றோர்களின் கனவுகளை நிறைவேற்றும் களமாகவே பார்க்கப்படுகிறது. இது, குழந்தைகளின் இயல்பான வளர்ச்சிக்கும், ஆக்கத்திறனுக்கும் தடையாக அமைகிறது. வசதி படைத்த குடும்பத்தினர் தங்கள் பிள்ளைகளுக்கு அதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, தனியார் வகுப்புகளில் படிக்க வைத்து, பரீட்சையில் வெற்றிபெற உதவுகின்றனர். ஆனால், ஏழை மாணவர்கள் பொருளாதார வசதியின்றி பின்தங்கி விடுகின்றனர். இதனால், சமூகத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரிக்கிறது. பிரத்தியேக வகுப்புகளில், பரீட்சைக்கான அணுகுமுறைகள் மற்றும் தந்திரோபாயங்கள் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி தேர்வு எழுதுவதால், மாணவர்களுக்கு உள்ளார்ந்த அறிவுத்திறன் இருக்கிறதா என்று ஆராய்ந்தால், பெரும்பாலும் இல்லை என்பதே பதிலாக இருக்கும். மாறாக, மாணவர்கள் அந்தத் தந்திரோபாயங்களைத் தமது சொந்த முயற்சியால் கண்டறிந்து, அதன் மூலம் தேர்வை எதிர்கொள்ளும்போதே, அவர்களின் உண்மையான நுண்ணறிவு வெளிப்படும்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவது பெற்றோர்தான், பிள்ளைகள் அல்ல. பிள்ளைகள் அதிக மதிப்பெண்கள் பெற்றாலும், 95 வீதத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவுக்கு தகுதி பெறாமல் போகின்றனர். அதேசமயம், குறைந்த மதிப்பெண்கள் பெற்றவர்கள் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்க வாய்ப்பு பெறுகின்றனர். இதனால், புலமைப் பரிசில் பரீட்சையின் நம்பகத் தன்மை கேள்விக்குறியாகிறது.

## வதைக்கப்படும் சிறார்கள்

இந்தப் பரீட்சை குழந்தைகளை இயந்திரங்களாக மாற்றுகிறது. கல்வி என்பது மகிழ்ச்சியான அனுபவமாக இல்லாமல், மன அழுத்தத்தை ஏற்படுத்தும் திணிப்பாக மாறுகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஒவ்வொரு நாளும் அதிகாலையில் இருந்து இரவின் இறுதி வரை படிக்க வைக்கின்றனர். இதனால், அவர்கள் பண்டிகைகள், கொண்டாட்டங்கள் மற்றும் ஓய்வெடுக்கும் நேரத்தை இழக்கின்றனர். கல்வியின் முக்கிய நோக்கம் ஆக்கத்திறனை வளர்ப்பதுதான். ஆனால், புலமைப் பரிசில் பரீட்சை குழந்தைகளின் ஆக்கத்திறனை அழிக்கிறது. அறிவு வளர்ச்சிக்கு கல்வி, சுய அறிவு, ஓய்வு மற்றும் அன்பு ஆகியவை அவசியம்.

ஆனால், இப்பரீட்சை குழந்தைகளை ஓய்வெடுக்கக்கூட அனுமதிப்பதில்லை. பெற்றோர்களுடனான உரையாடல் மற்றும் அனுபவங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளையும் தடுக்கிறது. எனவேதான், புலமைப் பரிசில் பரீட்சை நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்து பரவலாக நிலவிவருகிறது. ஆனால், அனைத்து பாடசாலைகளும் ஒரே தரத்தில் இருக்கும்போதுதான் இது சாத்தியமாகும். அதுவரை, இந்தப் பரீட்சை சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கும் கருவியாகவே இருக்கும். இதனாலேயே, கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய, அலரி மாளிகையில் மாகாண கல்வித் தலைவர்களுடனான எதிர்கால கல்வித் திட்டங்கள் குறித்து சந்திப்பில், 'பாடசாலைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் களைந்த பின்னரே இது குறித்து முடிவெடுக்க முடியும்' என்று தெரிவித்தார்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் ரத்துச் செய்யப்பட வேண்டுமானால், பாடசாலைகளுக்கு இடையிலான தர இடைவெளியை குறைக்க வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்காமல், சட்ட ரீதியாகவோ அல்லது கொள்கை ரீதியாகவோ மட்டும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டால், நாட்டில் நெருக்கடிகள் ஏற்படலாம். புலமைப் பரிசில் பரீட்சை நிறுத்தப்பட்டால், பிரத்தியேக வகுப்புகள் மூலம் பணம் சம்பாதிக்கும் அட்டூழிய கலாசாரம் முடிவுக்கு வரும். இதன் மூலம், பொருளாதாரச் சுமையும் குறையும். அந்தப் பணம் பிள்ளைகளின் வாழ்க்கைச் செலவுகளுக்காகவோ அல்லது கல்விச் செலவுகளுக்காகவோ பயன்படுத்தப்படும்.

இறுதியாக, புலமைப் பரிசில் பரீட்சையை ரத்து செய்வது அல்லது மேம்படுத்துவது குறித்து, கல்வி நிபுணர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் பலதரப்பினரின் கருத்துக்களை கணக்கில் எடுத்துக்கொண்டு, மாணவர்களின் நலனை மையமாகக் கொண்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இதுவே, நியாயமான மற்றும் நம்பகமான கல்வி முறைக்கு வழிவகுக்கும். ஒருவேளை இது ஒழிக்கப்பட்டால், பிள்ளைகளுக்கு விடுதலை கிடைக்கும், பெற்றோர்களுக்கு நிம்மதி கிடைக்கும், ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு வழிவகை ஏற்படும், அன்பும் பண்பும் நிறைந்த அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படை ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஆற்றுப்படுத்தும் கலையும் சிலையும்'

# வாழ்வுக்கு வரமாகும் விடயங்களை கொண்டமைந்த ஓர் அருமருந்து!

■ ப.ஸிந்துஷா

இலக்கியங்களின்வழி குறித்த சமூகம் சார் புரிதல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுகின்ற படைப்புகள் அக்காலத்தின் முக்கிய விடயங்களைப் பேசுபொருள்களாகக் கொண்டே எழுகின்றன. நூல்கள் உள்ளடக்கியுள்ள படைப்புகளும் அவை உணர்த்தும் விடயங்களும் அறியப்பட வேண்டியவை. அந்தவகையில் கந்தர் மடம் அ.அஜந்தனால் எழுதப்பட்ட 'ஆற்றுப்படுத் தும் கலையும் சிலையும்' எனும் நூல்தொகுப்பைக் குறித்து இப்பகுதியில் நோக்கலாம்.

இந்த நூலில் ஒரு நினைவுச்சின்னம் ஒரு வரலாற் றுத் தொடுதல், புகழ்பெற்ற ஓவியங்களின் உளவி யல் பின்னணி, மனிதனின் நடத்தையில் செல்வாக் குச் செலுத்தும் காரணிகள், உடல் மொழி, மெய்ப்படும் கனவுகள், தொடர்பாடல் திறன், வளர்க்கப்படவேண் டிய கலை, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் கலை, மீண்டெழுதல், சுயமறிந்தால் சுகமாகும் வாழ்வு, நலமான வாழ்வு நம் கையில் எனும் கட்டுரைகள் அடங்கியுள்ளன. ஒரேவகையான பண்புகளைக் கொண்ட கட்டுரைகளைத் தொகுத்தே இந்த நூல் ஆக்கப்பட்டுள்ளது.




இதன்படி:

'நினைவுச் சின்னம் ஒரு வரலாற்றுத் தொடுதல்' எனும் கட்டுரையில் நினைவுச் சின்னங்களின் முக்கியத்துவம் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டுள்ளது. அனைத்து நிகழ்வுகளும் நினைவாக மாற்றப்படுவதில்லை. காலம் கடந்தும் நிலைநிறுத்த வேண்டிய விடயங்களை அழியாத நினைவுச் சின்னங்களாக்கும் செயற்பாடு முன் னோர் காலம்தொட்டு நிலவிவருகிறது. சமய, அரசியல், கலாசார ரீதியில் முக்கியத்துவம் பெற்றவையாக அடையா ளம் காணப்படும் நிகழ்வுகள் நினைவுச்சின்னங்களூடாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதன் முக்கியத்துவத்தைக் இக்கட்டுரை சான்றுகளோடு விளக்கியுள்ளது.

'புகழ்பெற்ற ஓவியங்களின் உளவியல் பின்னணி' எனும் கட்டுரை வாசகர்களுக்குப் புதியதொரு பார்வையைப் பெற்றுத்தருகிறது. ஓவியம் என்பது கலைப்படைப்பு என் பதைத்தாண்டி உணர்வுகளின் பிரதிபலிப்பு. உளத்தினை ஆற்றுப்படுத்தக் கையாளுகின்ற ஓர் உத்தியாகவே ஓவி யங்கள் அமைந்துவிடுகின்றன. ஓவியங்கள் ஒவ்வொன் றுக்கும் பின்னால் ஏதோ ஒரு உளநிலை மறைந்திருக்கும் என்பதே இக்கட்டுரையின் மையமாகும். ஓவியங்களின் வழி பல கதைகள் பேசப்படுகின்றன. அச்சம், துக்கம், கோபம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகளில் ஏதோவொன்றை ஓவி யங்கள் வெளிப்படுத்துகின்றன என்பதைச் சான்றுகளோடு இக்கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது. மனிதனின் நடத்தை யில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பரம்பரை அலகுகளைத் தாண்டி அவன் வாழும் சூழல், சமூகத்தில் நிலவும் சமய, சமூக நம்பிக்கைகள், கலை, மொழி போன்ற பல விடயங்கள் மனிதனின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவை மட்டுமல்லாது உட லியல் தேவை, பாதுகாப்புத் தேவை போன்ற தேவைசார் விடயங்களும் ஒருவரின் நடத்தையைத் தீர்மானிக்கின்றன. இதனைக் கோட்பாடுகளின் ஊடாகவும் விளக்குவதாக 'மனி தனின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்' எனும் கட்டுரை அமைந்துள்ளது.

மொழி என்பது வெறும் பேச்சுக்களால் மாத்திரம் வெளிப்ப டுவதல்ல. உடல் மொழியும் ஓர் விடயத்தைப் புலப்படுத்தும் ஊடகமாகும். முகபாவனை, பார்வை, குரல், சைகைகள், உடல் இயக்கம் போன்ற பல விடயங்களினூடாகக் கருத்து வெளிப்பாட்டை அறியலாம். இவற்றை எவ்வாறு அறியலாம் என 'உடல்மொழி' எனும் கட்டுரையில் பேசியுள்ளது.

மனிதன் எதை அதிகம் சிந்திக்கின்றானோ அதுவே ஆழ் மனதில் பதிந்துவிடுகிறது. அதுவே கனவாகவும் வருகிறது. இந்த அடிப்படையில் கனவுகள் தொடர்பான ஆய்வுகளை 'மெய்ப்படும் கனவுகள்' எனும் கட்டுரை உணர்த்துகிறது. எனவே கனவுகள் என்பவை சாதரணமானவை அல்ல என்பதை இந்தக் கட்டுரையை வாசிப்பதனூடாக அறிய முடிகிறது.

எவ்வளவு விடயங்கள் எம்மில் பொதிந்திருந்தாலும் குறிப்பிட்ட விடயத்தைப் புலப்படுத்தத் தொடர்பால் திறன் அவசியம். சிறந்த தொடர்பாலுக்கு செவிசாய்த்தல் திறன், பதிலளிக்கூடிய ஆற்றல் என்பவை அவசியம் என்பதை 'தொடர்பாடல் திறன் வளர்க்கப்படவேண்டிய கலை' எனும் கட்டுரை கூறுகிறது. நாம் எண்ணும் அல்லது பேச விளை கின்ற விடயங்களைப் பொதுவெளியில் அச்சமின்றிப் பேச வேண்டுமெனில் தொடர்பாடல் திறன் அவசியம்.

ஒவ்வொருவருக்கும் தனித்துவமான தேவைகளும் திறன்க ளும் உள்ளன. தேவைக்ககேற்பவே திறன்களும் அமைகின் றன. பிறரின் நிலையோடு எம்மை ஒப்பிட்டுப்பார்க்கும்போது எம்மைத் தாழ்வாக எண்ணுவது தவறானது. அது மனநி லையைப் பாதிப்படையச் செய்யும். தன்னம்பிக்கையோடு வாழ்ந்து வாழ்வில் மகிழ்வான தருணங்களை உருவாக் கவேண்டியதன் அவசியத்தை 'சுயமறிந்தால் சுகமாகும் வாழ்வு' எனும் கட்டுரை கூறுகிறது.

இதனடிப்படையில் இந்த நூலில் இடம்பெற்றுள்ள கட்டு ரைகளின் பேசுபொருள்களை ஒப்பிட்டு நோக்கின், வழி அறியாது வாழ்வதறியாது நிற்கும் மனிதனை ஆற்றுப்ப டுத்தும் பண்பினைக் கட்டுரைகள் கொண்டமைந்துள்ளன. அத்தோடு கலைகளும் அவற்றின் வெளிப்பாடும் மனித உணர்வுகளின் பிரதிபலிப்பு என்பதையும் மையப்படுத்தி யுள்ளன. நினைவுச் சின்னங்களின் முக்கியத்துவத்தை ஆவணப்படுத்தியுள்ளன.

இந்தக் கட்டுரைகளின் தொகுப்பும், நூலின் பெயரும் உள் ளடக்கமும் ஒத்ததன்மை கொண்டவையாகக் காணப்படுகின் றன. இக்கட்டுரைகளை வாசிப்பதனூடாக வரலாற்று முக்கி யத்துவம் வாய்ந்த விடயங்களை அறிவதோடு வாழ்வின் சிக்கலான சந்தர்ப்பங்களை எதிர்கொள்ளும் பக்குவமும் ஏற்படும் என்பது உறுதி.

■ ஆனந்தராஜ்

# வீதி விபத்துகளுக்கு என்றுதான் முடிவு?

இப்போதெல்லாம் வீதி விபத் துகள் தொடர்பான செய்தி கள் வெளிவராத நாள்களே இல்லை என்று கூறும் அளவுக்கு தினசரி விபத் துக்கள் அதிகரித்து வருகின்றன. 'திருட ராய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்பதைப் போன்று எமக்குள் நாம் மாற்றத்தைக் கொண்டு வராவிட்டால் விபத்துகளைக் கட்டுப்ப டுத்த முடியாது என்பதே உண்மையா கும்.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகள், மித மிஞ்சிய வேகம், தவறான வாகனச் சாரத்தியம், போதையில் வாகனத்தைச் செலுத்துதல் உள்ளிட்ட பல காரணங்கள் வீதி விபத்துகளில் செல்வாக்குச் செலுத் துகின்றன.

வெளிநாட்டுப் பணம் இன்று எமது இளைஞர்களின் கரங்களுக்குள் அதி வேக மோட்டார்சைக்கிள்களை விதைத்தி ருக்கின்றன. அனேகமான விபத்துக்களு டன், நவீனத்துவமும், கூடுதல் வேகமும் புகுத்தப்பட்ட மோட்டார்சைக்கிள்கள் தொடர்புபட்டுள்ளன. எனவே, தமது பிள் ளைகளின் போக்குவரத்து பாதுகாப்பான முறையில் உள்ளதா என்பது தொடர் பில் பெற்றோர் கூடுதல் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

டிப்பர்களால் ஏற்படும் விபத்துகளும் இன்று மிகையாக அதிகரித்துள்ளன. 'டிப் பர்கள்' அநேகமாக ஒப்பந்த அடிப்படை யிலே இன்று சேவையாற்றுகின்றன. ஒரு நாளில் எத்தனை முறை பயணிக்கின் றார்களோ அதன் அடிப்படையிலேயே சாரதிகளுக்கு வேதனம் வழங்கப்படுகின் றது. இதனால், வீதிகளில் டிப்பர்களை இயக்க வேண்டிய குறித்தொதுக்கப்பட்ட வேகத்தையும் விட அதிவேகத்தில் இன்று பல டிப்பர்கள் இயக்கப்படுகின்றன. எனவே, விபத்துகள் நேர்ந்த பின்னர் டிப்பர்களை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்வதையும் விட, விபத்துக் கள் சம்பவிக்கக் காரணமான வகையில் வேகமாக டிப்பர்களைச் செலுத்தும் போது அவற்றின் சாரதிகளுக்கு எதிராக பொலிஸார் கடும் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் நிலைமைகளை ஓரளவு கட் டுப்படுத்தலாம். அநுர அரசின் 'தூய இலங்கை' திட்டத்தின் கீழ் இந்த வீதி விபத்துக்களுக்குத் தீர்வு கிடைக்குமா என்று பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை உலகில் ஒப்பற்ற பேனாப் போராளி பாரதி!



இலங்கைப் பத்திரிகை நிறுவனமும் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இணைந்து மவுண்ட் லவினியா ஹோட்டலில் ஜனவரி 7ஆம் திகதி இரவு நடத்திய 'சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருதுகள்' வழங்கும் வனப்புமிகு விழாவில் இறுதியாக நான் பாரதியைச் சந்தித்தேன். நீண்ட நேரமாக அவருடன் பேசி, மீண்டும் சந்திப்போம் என்றுகூறி இருவரும் விடைபெற்றுக்கொண்டோம். ஆனால், அதற்குப் பிறகு ஒரு மாதமும் இரு நாள்களும் கடந்த நிலையில் கடந்த ஞாயிறன்று பாரதி எம்மிடமிருந்து நிரந்தரமாகவே விடைபெற்ற துயர்நிறைந்த செய்தி என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

பாரதி ஒரு சிறந்த பத்திரிகையாளன் என்பதற்கு அப்பால் ஒரு சிறந்த மனிதநேயன். அரசியலைப் போன்றே போட்டியும் சூழ்ச்சியும் நிறைந்ததாக மாறிவிட்ட ஊடகத் துறையில் பாரதியைப் போன்று முரண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சகலருடனும் இணக்கப் போக்குடன் ஊடாட்டங்களைச் செய்யும் ஒரு பத்திரிகையாளனை இனிமேல் காணமுடியுமா? என்று மனம் ஏங்குகிறது. மற்றவர்களுக்கு தீங்கு செய்வதை கனவிலும்கூட நினைத்துப் பார்த்திருக்காத ஒரு பிறவி பாரதி.

ஆயுதமேந்திய இயக்கங்கள் தோற்றம் பெறத்தொடங்கிய நாள்களில் அவரின் பத்திரிகைத்துறைப் பிரவேசம் இடம் பெற்றது. முதலில் 1980களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஈழமுரசு, முரசொலிப் பத்திரிகைகளில் பணியாற்றி பாரதி இந்திய அமைதி காக்கும் படை வடக்கு, கிழக்கில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் விபத்தொன்றில் சிக்கிய பின்னரே வீரகேசரியில் இணைந்து கொண்டார். பாரதியின் பத்திரிகைத்துறை வாழ்வு உள்நாட்டுப்போர் நீடித்த மூன்று தசாப்தங்களையும் போர் முடிவுக்கு வந்ததற்குப் பின்னரான கடந்த பதினைந்து வருடங்களையும் உள்ளடக்கியதாகும். அதன் காரணமாக அவர் இயல்பாகவே தமிழ்த் தேசியவாத அரசியல் கோட்பாடுகளில் நிறைந்த ஈடுபாடு கொண்டவராக, தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் பற்றுறுதியுடன் நியாயப்படுத்துவதற்கு தனது எழுத்தை அர்ப்பணித்தவராக வாழ்ந்தார். அதன் விளைவாக சிறந்த ஓர் அரசியல் விமர்சகராகவும் அவரால் விளங்கமுடிந்தது. ஊடகத்துறையில் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் பல மட்டங்களில் பாரதிக்கு பெருமளவில் நண்பர்கள், அபிமானிகள் இருந்தார்கள். வெறுமனே அலுவலகத்துக்குள் தன்னை முடக்கிக் கொண்ட ஒரு பத்திகையாளராக இல்லாமல் வெளித்தொடர்புகளை நிறையவே அவர் ஏற்படுத்திக் கொண்டதன் விளைவாக புலம்பெயர் தமிழ்ச் சமூகத்திலும் அவர் நன்கு அறியப்பட்டவராக விளங்கினார். பல வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொண்டு தனது அனுபவத்தை வளப்படுத்திக்கொண்டார்.

பாரதி தனது அபிப்பாராயங்களை பெரிதாக வெளியில் பேசாத ஒரு பிறவி. ஆனால், நிதானமாக, ஆரவாரமின்றி சகலவற்றையும் அவதானித்து செயற்பட்ட ஒருவர். பரபரப்புக் காட்டுவதில் நம்பிக்கையில்லாத ஒருவர். ஒப்படைக்கப்பட்ட பொறுப்பைக் கச்சிதமாகச் செய்வதில் கண்ணாயிருப்பார். வீணான அபிப்பிராயங்கள் குறித்து அக்கறைகாட்டமாட்டார்.

அவரது மறைவை ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று கூறுவதை விடவும் நிச்சயமாக ஈடுசெய்யப்பட வேண்டிய இழப்பு என்றே நான் கூறுவேன். ஏனென்றால், பாரதியைப் போன்ற பரந்த அனுபவமும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் கொண்ட பத்திரிகையாளர் தமிழ் ஊடகத்துறைக்கு வேண்டும்.

**வீரகத்தி தனபாலசிங்கம்**

## பணியாத வீரன்!

எங்கள் அபிமன்யு வீழ்ந்தான்
ஒருகணம் அர்ச்சுனன் ஆனோம்

ஒருகை இழந்தும் பணியாது
மறு கை பேனா உயர
அஞ்சாது போர் நெருப்பூடு
ஊடக காகிதம்
எடுத்துச் சென்ற வித்தைக்காரனே
விடுதலை உணர்வு தூங்கும்
எரிமலையாக அமைதியாய் நிமிர்ந்த
ஊடக தோழனை இழந்தோம்.

பாரதி,
கண்ணீருடும் பெருமிதத்தோடு
வழியனுப்புகிறோம்
போய்வா தோழா

**வ.ஐ.ச.ஜெயபாலன்**

# நம்முள் தோன்றும் மாற்றமே நவீன யுகத்தின் மாற்றமாகும்

**பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)**

வெற்றிக்காக, நாம் முழுமையாக அக்கறை கொண்டு மாற்றத்தை ஏற்று. அந்தக் கொள்கையின் அடிப்படையில் நமது இலக்குகளை அடையவேண்டும். "மாற்றமில்லாமல் முன்னேற்றம் ஏற்பட முடியாது." இந்தக் கொள்கை நாம் வெற்றியடைய வழிகாட்டுகிறது, சவால்களை மீற உதவுகிறது மற்றும் நமது ஆசைகளை அடைய வழிசெய்கிறது.

பூமி மற்றும் மனிதர்கள் காலப்போக்கில் தொழில்நுட்ப வளர்ச்சியோடு ஒன்றி மாற்றமடைந்துள்ளனர். இந்த வளர்ச்சி முன்னேற்றத்திற்கு அவசியமாக இருந்தது. அதுபோல, வெற்றியின் பாதையில் நாம் மாற்றத்தை ஏற்றுக்கொள்வதே முதலாவது படி. மாற்றத்தை எதிர்த்து இருந்தால், நமது வளர்ச்சிக்குத் தடையை ஏற்படுத்தியிருக்கும். மாற்றம் மோசமாகவோ, நல்லதாகவோ இருக்கலாம் . நாம் நல்ல மாற்றத்தை நோக்கியே பயணிக்கவேண்டும். நமது தற்போதைய நிலை, துக்கம், தோல்வி மற்றும் சவால்கள் போன்றவை தற்காலிகமானவை. அவை காலப்போக்கில் மாற்றம் காணக்கூடியவை. அந்த நிலைகள் மாற்றப்படுவதை எதிர்பார்க்கும் நிலையில், நமது மனப்பான்மையில் மாற்றத்தை ஏற்படுத்தி வெற்றியை அடையவேண்டும். வின்ஸ்டன் சர்சில்லின் "முன்னேற்றம் மாற்றமாகும், மற்றும் பூரணத்தை அடைய அதிகம் திருத்தம் தேவை." என்கின்றார்.

குழந்தையிலிருந்து முதியவராக மாறும் வரை பல மாற்றங்களை உடல் உருவாக்குகிறது. பூமி மாற்றத்துடன் நிலைத்திருப்பதை போல, நாமும் அதனுடன் ஒன்றித்துள்ளோம். இயற்கையின் ஒவ்வொரு இயக்கத்திலும் மாற்றம் அடிப்படையானது. ஆரோக்கியமான சக்தியுடன் நாங்கள் ஒத்திசைவு அடையாதிருந்தால், மாற்றமும் எங்களை வரவேற்காமல் போகலாம். கடுமையான முயற்சி மற்றும் ஆரோக்கியமான சக்தியுடன் இணைவது முக்கியம்.

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு உயர்ந்த இலக்குகள் தேவை. நாங்கள் பயனற்ற வாழ்க்கையை விடுத்து, உயர்ந்த இலக்குகளை நோக்கி எமது வாழ்வை மாற்றவேண்டும். உண்மையான நண்பர்கள், எங்கள் வெற்றியை ஆதரிக்கவும், துன்பங்களை பகிரவும் செய்கின்ற நல்ல நண்பர்களைக் காணாதிருந்தால், நாங்கள் சிறிய மாற்றங்களை அதில் செய்யவேண்டும். திட்டமிடல் வெற்றிக்கு முக்கியமாகும். திட்டமிடலற்ற செயல்கள் குறிக்கோள் இல்லாத கப்பலாகவே இருக்கின்றன. திட்டமிடல் மற்றும் அதைப் பின்பற்றுவது முக்கியமாகும். நமது திட்டமிடல் குறைவாக இருந்தால், அதில் மாற்றங்கள் செய்யவேண்டும். தோல்விகளை வெறுக்காமல், அதை வெற்றிக்கான ஊக்கியாக மாற்ற வேண்டும். நமது உடல் மற்றும் உள்ளம் என்பன வெற்றியுடன் இணைக்கப்பட்டுள்ளன. புதிய பழக்கங்களை உருவாக்கி செயல்களை விரைவில் முடிக்க முயற்சிப்பது முக்கியமாகும். சவால்களை எதிர்கொள்ளுதல் நம்மை உயர்த்துகிறது, சவால்களை எதிர்கொள்ளும் திறன் முக்கியமாகும். இது கல்வி மற்றும் அனுபவக் கல்வி மிக்க மாற்றங்களை ஏற்படுத்தும். முயற்சிகள் மற்றும் ஒழுக்கம் என்பன வெற்றிக்கான தேவைகள். இவற்றை நாம் பின்பற்றவில்லை என்றால் அதனை மாற்றம் செய்வோமாக வெற்றியை அடைய, மாற்றங்களை ஏற்று மற்றும் நமது பலவீனங்களை மாற்றி, நாம் மிகச் சிறந்தவர் [illegible]



புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
0773165555
puthanpoikaiuthayan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் கிருஷ்ணவேணி அவர்களின் அன்புக் கணவர்

**அமரர் சின்னத்துரை ஸ்ரீதரன்**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!! சாந்தி!! சாந்தி!

துயரில் பங்குகொள்ளும் பாடசாலைச் சமூகம்
யா/அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலை

தோற்றம் 11.01.1980 மறைவு 10.02.2025

## கண்ணீர் அஞ்சலி


## சபாரட்ணம் யோகேஸ்வரி




தோற்றம் 02.01.1941 மறைவு 10.02.2025

எனது நண்பன் யசோ மோட்டர்ஸ் உரிமையாளர் யசோதரன் (யசோ) அவர்களின் அன்புத் தாயார் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கொணிக்கா கலர் லாப்,
சிறிராம் ஜுவலரி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.





# நல்லூர்கந்தனுக்கு தைப்பூசத்திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 12

முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கியமான தைப்பூச திருவிழா நேற்று மாலை யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நல்லூர் கந்தன் மஞ்சத்தில் எழுந்தருளி பக்த கோடிகளுக்கு அருள்பாலித்திருந்தார். நல்லூரான் பக்தர்கள் ஆலய வளாகம் முழுவதும் நிறைந்து காணப்பட்டனர். (ம)



யாழ். மாவட்டச் செயலக

# பிரதம கணக்காளராக கிருபாகரன் கடமையேற்பு

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளராக செ.கிருபாகரன் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளடங்கலான பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டார்கள்.

பிரதம கணக்காளராக கடமையேற்ற செ.கிருபாகரன் முன்னர் இலங்கை ரயில் திணைக்களத்தில் பிரதம கணக்காளராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-27)

## முசலி பிரதேச சபை கடைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல்- 2025

முசலி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சிலாவத்துறை நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடைகளுக்கான (09 கடைகள்) நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்கவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 12.02.2025 - 25.02.2025 மு.ப 10.00 மணி வரை.
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 25.02.2025 பி.ப 3.00 மணி வரை. .
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 25.02.2025 பி.ப 3.00 மணி

01. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் (original, Copy) தயாரித்து தனித்தனியான உறைகளில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு "தலைவர், பிரதேச பெறுகைக்குழு, முசலி பிரதேச சபை, சிலாவத்துறை" எனும் முகவரிக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் குறித்த தினத்திற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென முசலிப் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். கேள்விப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி கோரும் சேவையின் விபரம் குறிப்பிடப்படல் வேண்டும்.(கடை இலக்கம் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.)
02. கேள்விப் பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத மற்றும் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணத்தினை செலுத்தி வதிவிடச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை நிழற்பிரதி அல்லது கடவுச்சீட்டு நிழற்பிரதி அல்லது சாரதி அனுமதிப்பத்திர நிழற்பிரதி இவற்றில் ஒன்றையேனும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கடந்தகால கேள்விகள் மூலம் சபைக்கு வருமதியான நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்கேற்கத் தகுதியற்றவர்கள்.
04. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வியின் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
05. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
06. 25.02.2025 பி.ப 3.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். மேலும் கேள்விகளை முழுமையாக / பகுதியாக ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச்சபைக்கு மட்டும் உரியதாகும்.
07. பிரதேச சபையின் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் கடைகளினைப் பெறுவோர் எவ்விதத்திலும் கடையினை 3ம் நபருக்கு கைமாற்றம் செய்ய முடியாது. மேலும் அவ்வாறு கைமாற்றம் செய்தால் தங்களுக்கு வழங்கப் பட்ட கடை எவ்வித முன்னறிவித்தலுமின்றி பிரதேச சபையினால் உடன் கையேற்கப்படும் என்பதுடன் செலுத்தப்பட்ட கேள்வித்தொகை மீள வழங்கப்படமாட்டாது.
08. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
09. சட்டரீதியற்ற வியாபாரச் செயற்பாடுகளினை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் தங்களது கடையானது எமது பிரதேச சபையினால் கையகப்படுத்தப்படும்.
10. நபர் ஒருவருக்கு கடை ஒன்றிற்கு ஒரு கேள்விப்படிவம் மட்டுமே வழங்க முடியும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் குறித்த கேள்வித் தொகையானது சபையினால் தங்களுக்கு மீளளிக்கப்படமாட்டாது.
12. மாதாந்த வாடகைத் தொகையானது காலத்திற்குக் காலம் மாற்றப்படும் போது குறித்த வாடகையினை மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
13. நபர் ஒருவர் பல கடைகளுக்கும் விண்ணப்பிக்க முடியும். அவ்வாறு விண்ணப்பித்து பல கடைகளுக்கும் சித்திபெறும் பட்சத்தில் அதிகூடிய தொகைக்கு விண்ணப்பித்த கடையினையே பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வி சம்மந்தமான மேலதிக விபரங்களை / தகவல்களை பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| கடை இல | அளவுப் பிரமாணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | சபையின் குறைந்த கேள்வித்தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| 01 | 6m*3.6m | 3000.00 | 41000.00 | 4,020,000.00 | 3500.00 |
| 02 | 6m*3.6m | 3000.00 | 41000.00 | 4,020,000.00 | 3500.00 |
| 03 | 6m*3.6m | 3000.00 | 41000.00 | 4,020,000.00 | 3500.00 |
| 04 | 6m*3.6m | 3000.00 | 28000.00 | 2,800,000.00 | 2500.00 |
| 05 | 6m*3.6m | 3000.00 | 28000.00 | 2,800,000.00 | 2500.00 |
| 06 | 6m*3.6m | 3000.00 | 28000.00 | 2,800,000.00 | 2500.00 |
| 07. | 6m*3.95m | 3000.00 | 36000.00 | 3,600,000.00 | 3200.00 |
| 08. | 6m*3.95m | 3000.00 | 36000.00 | 3,600,000.00 | 3200.00 |
| 09. | 7.9m*3.9m | 3000.00 | 32000.00 | 3,160,000.00 | 3000.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**முசலிப் பிரதேச சபை.**

(CR/44306) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
01
07
1948



விண்ணில்
12
02
2024

## அமரர் கணபதி சுந்தரலிங்கம்

(ஓய்வு நிலை அதிபர் - இலங்கை அதிபர் சேவை தரம் - 1)

திதி : தை வளர்பிறைத் திருதியை

உடலது நீங்கினாலும் உயிரது எம்முடனே எனத்
திடமாக இருப்பதன்றி வேறு வழி எமக்கேது?
நிறைவாக எம் மனதில் காலமெல்லாம் வாழ்வீர்கள் !
இறையாக உள்ளமதில் குறைவற்று உறைவீர்கள்.


"முத்துபதி"
மாறாம்புலம்,
அல்வாய் வடமேற்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்
077 923 5569

(CS/2504)J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
09
11
1951



மறைவு
11
02
2025

## முருகேசு இரத்தினசிங்கம்

நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகேசு இரத்தினசிங்கம் நேற்று (11.02.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பகவதியின் அன்புக் கணவரும், இரட்ணகரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - CECB யாழ். போதனாவைத்தியசாலை), கனிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ்வரன், ரேணுகா ஆகியோரின் மாமனாரும், சரஸ்வதி, யோகேஸ்வரி, பரமேஸ்வரி, நாகேஸ்வரி, குணரத்தினம், பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, இராசதுரை மற்றும் துரைசிங்கம், ஜெயராசசிங்கம், உலகநாதன் (லண்டன்), இந்திரராஜா (சுவிஸ்), பவளம், கமலம், தவமணி, தங்கமலர், இராசமலர் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், லவன், லக்ஷமன், விபுஷன், தரணித், தசானா, அயானா, டில்ஷான், மாதேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோவிலாக்கண்டி,
அம்மன் கோயில் வீதி,
நாவற்குழி கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்
077 360 8302

(CS/57489) N-1

# நடுக்கட்டு சேவைக்கான விண்ணப்பம் கோரல் - 2025

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆதனவரி அறவீடுகளை மேற்கொள்வதற்கு ஆதனவரிப் பகுதியின் கீழ் கடமையாற்றுவதற்கு நடுக்கட்டு சேவைக்கான (15பேர்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரி உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும் அத்துடன் யாழ் மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. விண்ணப்பப்படிவத்தினை மாநகரசபையில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் பிறப்புசான்றிதழ், கல்விச்சான்றிதழ், தேசியஅடையாள அட்டை, கிராமசேவையாளரின் நற்சான்றிதழ் மற்றும் வதிவிடச்சான்றிதழ் என்பவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
3. நடுக்கட்டு சேவைக்கு தெரிவு செய்யப்படுபவருக்கு அவரால் சேகரிக்கப்படும் ஆதனவரி (கடந்த வருடங்களில்) நிலுவைத்தொகையின் 12% மான தொகை தரகு (Commission) அடிப்படையிலான கொடுப்பனவாக வழங்கப்படும். அவரால் மாதாந்தம் சேகரிக்கப்படும் தரகுப்பணத்தின் 8% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். சேகரிக்கப்படும் தரகுப்பணத்தின் 12% மான தொகை சபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், 3% மான தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்யப்படும்.
4. நடுக்கட்டு சேவைக்கு இணைக்கப்படும் நடுக்கட்டு உத்தியோகத்தர் இருபத்தையாயிரத்தை செலுத்துதல் வேண்டும்.
(25,000.00) மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக
5. கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் **"நடுக்கட்டு சேவைக்கான விண்ணப்பம்"** எனக் குறிப்பிட்டு 2025.02.25 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக **ஆணையாளர்", மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.
6. நடுக்கட்டு உத்தியோகத்தர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டோர் இங்கு சேவையாற்றியதன் அடிப்படையில் சபையின் எந்தவொரு நிரந்தர பதவிக்கான நியமனத்தையும் கோரமுடியாது.
7. நியமனம் தொடர்பான இறுதித் தீர்மானம் ஆணையாளரால் மேற்கொள்ளப்படும்.

**மாநகர ஆணையாளர்.**
**யாழ்ப்பாணம்**
**12.02.2025**

(cr.44304) (n-1)

# 31 ஆம் நாள் சமர்ப்பணம்

## பொன்னையா கணேசலிங்கம்

(முன்னாள் பிள்ளையார் இன் ஹோட்டல் முகாமையாளர்)

பிறப்பு
31.01.1945

இறப்பு
13.01.2025



நாற்பத்து நான்கு ஆண்டு கால
வாழ்க்கையிலே......
'திருமதி' என்ற வெகுமதியை
எனக்களித்த ஆருயிரே!

மும் மொழி ஆற்றலோடு
முழு நிலவாய் காட்சி தந்த
என்னுயிரே!

செய்யும் தொழிலே தெய்வமென
தான் மதித்து.......
விருந்தோம்பல் நன்மதிப்பும்
செல்வாக்கும் சொல்வாக்கும்
நிறைவாகத் தான் பெற்று
பாசத்தின் உறைவிடமாய்
பக்தியின் இருப்பிடமாய்
வாழ்ந்து காட்டிய பெருந்தகையே!

இதயக் குமுறலுடன்
- விண்ணுலகம் நாடி
எம்மையெல்லாம் துடிக்க வைத்து
'பூர்வபக்க சதுர்த்தசித் திதி தனிலே
இறைவனிடம் சரணடைந்த
என் அன்புக் கணவரே!

வலி நிறைந்த என் கண்ணீர்
பூக்களை நின் பாதக்கமலங்களில்
காணிக்கை யாக்குகின்றேன்!

ஓம் சாந்தி !!!

பிரிவால்துயருறும்
திருமதி
க. தவமணிதேவி
மனைவி

மூதாளர் அன்பு இல்லம்
சிவபுரவளாகம்
A9 வீதி, முகமாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைப்பாமாலை

யாழ். வெற்றிகாட்டுப் பிள்ளையார் இசைப்பாமாலை இறுவட்டு வெளியீட்டுவிழா ஆலய நிர்வாக சபைத்தலைவர் க.சிவகுரு நாதன் தலைமையில் ஆலயமண்டபத்தில் பௌர்ணமி நாளான இன்று புதன்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ ரவீந்திரக்குருக்கள் ஆசியுரையையும், கோப்பாய் கலாசாலை விரிவுரையாளர் வே. நந்தகுமார் வெளியீட்டுரையையும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார் நயப்புரையையும் ஆற்றவுள்ளனர்.

(ம-25)

## வீடு வாடகைக்கு

வவுனியா தோணிக்கல்லில் Hostel ஆக பாவிக்கக்கூடிய அல்லது சிறிய குடும்பத்திற்குரிய மேல் வீடு வாடகைக்கு உண்டு.

(CS29079) J-1

**076 322 3687**

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு. Computer Operator ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(CS2893) J-1

**076 151 7481, 077 494 9683**

## விற்பனைக்கு

8 KV யூரோபவர் (Europower) ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு (உற்பத்தி பெல்ஜியம்)

தொடர்புகளுக்கு:

**077 623 7416**

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Basel ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

**கந்தையா ஜெயானந்தன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 10.10.1961 மறைவு 02.02.2025

பிரிவில் பங்குகொள்ளும்
ஆலய பரிபாலன சபையினர்
விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.

(CR/44307) J-1

## கேள்வி மனுக் கோரல்

உடுவில் மகளிர் கல்லூரியில் விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கு வர்ணம் பூசுவதற்காகா (Painting) கேள்வி மனுக்கோரப் படுகின்றது. இதனை மேற்கொள்ள விருப்புடையோர் விளம்பர திகதியில் இருந்து 7 நாட்களுக்குள் பாடசாலை ஆய்வு கூடத்தினை பார்வையிட்டு தங்கள் விபரங்களுடன் மனுவை உடுவில் மகளிர் கல்லூரி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ஒப்படைக்கவும்.

**அதிபர்,**
**உடுவில் மகளிர் கல்லூரி.**

(cr.44303) (N-1)

## கண்ணீர் அஞ்சலி

# சபாரட்ணம் யோகேஸ்வரி



**தோற்றம் 02.01.1941** **மறைவு 10.02.2025**

எனது நண்பன் யசோ மோட்டர்ஸ் உரிமையாளர் யசோதரன் (யசோ) அவர்களின் அன்புத் தாயார் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சாரங்கா ஜுவலரி உரிமையாளர்,**
**வெங்கடேஸ்வரா பஸ் பாட்னரும்,**
**ஊழியர்களும்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 03 . 1948



மறைவு 11 . 02 . 2025

# சிதம்பரநாதர் சின்னத்துரை

(ஓய்வு பெற்ற சாரதி தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் )

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதர் சின்னத்துரை நேற்று (11.02.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர்-நாச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திரபுவனானந்ததேவி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற பூமாதேவி மற்றும் சிவசுப்பிரமணியம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மோகனராஜ் (Pepsi களஞ்சிய முகாமையாளர்), தர்சினி, றஜீத் (அபிவிருத்தி உத்தியோகத்தர், இறைவரித் திணைக்களம்), கஜமுகன் (சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்டச் செயலகம் -கிளிநொச்சி), மதீசன் (சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்டச் செயலம்-கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிசாந்தினி, சுதாகரன், கீதாஞ்சலி, ரனுசியா (கிராம உத்தியோகத்தர்-சுந்திரபுரம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜஸ்மிதா, மாதினி, கோசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கைதடி வடக்கு தச்சன் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 643 0563**

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

### 2025 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை (தபால் நிலைய வீதி) நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் தபால் நிலைய வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட கடையினை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 13.02.2025 - 27.02.2025 வரை (முற்பகல் 9.00 மணி தொடக்கம் பி.ப 02.00 மணி வரை அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 28.02.2025 மு.ப 10.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 28.02.2025 மு.ப 10.30 மணி

| இல | கடை இலக்கம் | கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | | |
| 1 | கடை இல - 01 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 2 | கடை இல - 04 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 3 | இரண்டு கடைகள் இல - 06 | 2,000.00 | 52,800.00 | 22,000.00 | **5,280,000.00** |
| 4 | கடை இல - 07 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 5 | கடை இல - 08 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 6 | கடை இல - 09 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |

### நிபந்தனைகள்:

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், **கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.** என்னும் முகவரிக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **தபால் நிலைய வீதியில் அமைந்துள்ள புதிய கடை இல.......** என கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 28.02.2025 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளித்து விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
5. குறித்த கடையின் ஒப்பந்ததாரர்கள் எந்த வகையிலும் உப வாடகைக்கு வழங்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
6. நீண்ட கால குத்தகை கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
8. அதிகூடிய கேள்வித்தொகை கோரும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும். ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப்படமாட்டாது.
9. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத் தொகையையும் பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
10. கேள்வித் தொகை எந்த சந்தர்ப்பத்திலும் சபையால் மீளளிக்கப்பட மாட்டாது.
11. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள்,மாற்றங்கள்,புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
12. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
13. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
14. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எதுவித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக செயலாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
15. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.** **2025.02.12**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுடன் கைதானார் இளைஞர்!

வவுனியா, பெப். 12

வவுனியா தோணிக்கல் பகுதியில் 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை டுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

சந்தேகநபருக்கு 34 வயது என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-110)

### ஊடகங்களுக்கு...

சென்றபோதே, அவர்களுக்குப் பொலிஸாரால் கடுமையான கெடுபிடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பலாலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தையிட்டி திஸ்ஸ விகாரையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தாலோ அல்லது, ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றும் பொதுமக்களாலோ விகாரைக்கு வரும் பொதுமக்களுக்கு அல்லது விகாரையின் வழிபாடுகளுக்கு எந்த இடையூறும் வழங்கக்கூடாது என்று மல்லாகம் நீதிமன்றத்தின் கட்டளை அந்தப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

### எமது...

ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களின் ஏற்பாட்டில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் இந்தப் போராட்டம் ஆரம்பித்தது.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

தையிட்டியில் எமது பூர்வீகக் காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து விகாரை அமைத்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த விகாரை இன்று ஆக்கிரமிப்பின் எச்சமாகவே காணப்படுகின்றது. எனவே, அதை அகற்றிவிட்டு, எங்களின் காணிகளை எங்களிடமே ஒப்படைக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

'மக்களின் காணிகள் மக்களுக்கே' என்று ஜனாதிபதி அநுர கூறுகின்றார். ஆனால், விகாரைகள் அமைந்துள்ள எங்களின் காணிகளை எம்மிடம் தரமுடியாது என்று சில அமைச்சர்கள் கூறுகின்றனர். அப்படியென்றால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் சொல்வது ஒன்றையும், செய்வது ஒன்றையுமாகத்தான் செயற்படுகின்றது. மாற்றுக் காணிகளை நாங்கள் கோரவில்லை. இந்த மண் எங்களின் பூர்வீகம். இது எங்களின் உணர்வுடன் கலந்த விடயம். எனவே, எமக்கு எமது காணிகள்தான் வேண்டும் என்றனர்.

நேற்று ஆரம்பித்த போராட்டம், பௌர்ணமி தினமான இன்று புதன்கிழமையும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-125)

### கஜேந்திரகுமார்...

அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுரகுமார தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது, பொதுமக்களின் தனியார் காணிகளை அடாத்தாக ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தேன்.

இதன்பின்னர், 'விகாரையை இடிக்க வாரீர்' என்று நான் அழைப்பு விடுப்பது போல் போலியான விளம்பரம் ஒன்று வடிவமைக்கப்பட்டு அது சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டிருந்தது. என்னால் தெரிவிக்கப்படாத அல்லது என்னால் பரப்பப்படாத அந்த விடயம் தொடர்பில் வெளியான விளம்பரம் போலியானது என்று அன்றைய தினமே நான் எனது சமூக ஊடகங்களில் உரிய தெளிவுபடுத்தலையும் வழங்கியிருந்தேன்.

ஆனால், இந்த விடயத்தில் குறைந்த பட்சப் புரிதல்கூட இல்லாத பொலிஸார் எனக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, எனக்கு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-18-125)

### குடும்பத்...

சுப்பையா ஆனந்தன் (வயது-40) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். சம்பவம் தொடர்பாக தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார்விசாரணைகளைமுன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-110)

### வாரத்தில்...

செய்து வருகின்றனர். தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் மத்திய அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதிலும், அதற்கு மத்திய அரசாங்கத்தால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தமிழகக் கடற்பரப்பில் போதிய மீன்கள் இல்லாத காரணத்தாலேயே, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்திய மீனவர்கள் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்த வேண்டுமாயின், இலங்கைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமையை இந்திய மத்திய அரசாங்கம் மீள உறுதிப்படுத்த வேண்டும்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆட்சிக்காலத்தில், கடந்த 2013 ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்பரப்பில் வாரத்தில் சில நாள்கள் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்கும் வகையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2014ஆம் ஆண்டு மோடி பிரதமரான பின்னர் அந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. மன்மோகன் சிங் முன்னெடுத்த விடயங்களை தற்போதை பா.ஜ.க. அரசாங்கம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-இ)

### பலஸ்தீனத்துக்காக...

இதன்போது, 'காஸாவில் இருந்து பலஸ்தீனர்களை வெளியேற்றும் அமெரிக்காவின் அறிவிப்பில், இலங்கையின் நிலைப்பாடு என்ன?' என்று அமைச்சர் நளிந்தவிடம் கேட்கப்பட்டது. இதற்குப் பதில் வழங்குகையிலேயே, 'பலஸ்தீனத்துக்காக இலங்கை தொடர்ந்தும் குரல்கொடுக்கும்' என்று அமைச்சர் நளிந்த தெரிவித்துள்ளார்.

'பலஸ்தீன மக்களின் மனித உரிமைகளுக்காக நாங்கள் தொடர்ந்து குரல்கொடுப்போம். அவர்களுக்காக நாங்கள் தொடர்ச்சியாக முன்னிலையாவோம். எனினும், அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அறிவிப்புகள் தொடர்பில் நாங்கள் கலந்துரையாடவில்லை. தேவையேற்படின் எதிர்காலத்தில் அதுபற்றி அறிவிக்கப்படும்' என்று அமைச்சர் நளிந்த மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

### கப்பற்...

சீர்ற்றதன்மையால் நிறுத்தப்பட்டிருந்தது. இன்றுமுதல் சேவைகள் இடம்பெறவிருந்த நிலையில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சேவை இடம்பெறாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-27-125)

### நல்லூரான்...

திறந்துவைக்கப்பட்டது. நல்லூர் கைலாசப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து நெல்மணிகள் நிரப்பப்பட்ட பெட்டகத்தை, பாரம்பரிய முறைப்படி மாட்டுவண்டியில் ஏற்றி கோவில் வீதி வழியாக, நல்லூரான் தெற்கு வாசல் வளைவை அடைந்து வளைவுதிறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நெல்மணிகள் நிரப்பப்பட்ட பெட்டகம் நல்லூர் ஆலயத்தை அடைந்து ஆலயத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு சிவாச்சாரியாரிடம் கையளிக்கப்பட்டது. (அ-ம-இ)

### நீதி...

அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போது அமைச்சர் மேலும் தெரிவித்தாவது:-

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவுபெறவில்லை. அவை இன்னும் நடைபெற்றுவருகின்றன. விசாரணையில் தெரியவரும் விடயங்களுக்கு அமைய தொடர்புடையவர்களுக்கு வழக்குத் தொடரப்படும். குற்றவாளிகளைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு நீதி அமைச்சருக்குக்கிடையாது. குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்தவும், வழக்குத் தொடரவும் அரசாங்கம் உறுதியாக உள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அழைத்து ஜனாதிபதியும் பேச்சு நடத்தி வருகின்றார். எனவே, நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும். இந்த விடயத்தில் எவரும் சந்தேகப்பட வேண்டாம் - என்றார். (அ-ம-44)

### எரிவாயு...

லிட்ரோ எரிவாயு விலையை அதிகரிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

போதிய கையிருப்பு உள்ளதாலும், நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் விதமாகவுமே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்த்தன மேலும் கூறியுள்ளார். (அ-ம)

### பயங்கரவாதச்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதுதான் எமது நோக்கம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீடிப்பது எமது நோக்கம் அல்ல. எனினும், தேசியப் பாதுகாப்பு தொடர்பில் மற்றுமொரு சட்டம் உருவாக்கப்படும் வரையில் தற்போதைய சட்டம் நடைமுறையில் இருக்கவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பிலும் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது - என்றார். (அ-ம-44)

### இ.போ.ச...

பயணிகளை ஏற்றிக்கொண்டு ஏட்டிக்குப் போட்டியாக 'பந்தய ஓட்டத்தில்' ஈடுபட்டபோதே அந்தப் பேருந்துகள் இரண்டும் விபத்தில் சிக்கியுள்ளன.


பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இரண்டு பேருந்துகளையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றனர்.

இதையடுத்து, மாற்றுப் பேருந்துகள் வரவழைக்கப்பட்டு பயணிகள் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

வடமாகாணத்தில், தொடர்ச்சியாகவே இ.போ.ச. பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் பயணிகளை ஏற்றிய படி 'பந்தய ஓட்டத்தில்' ஈடுபடுகின்றன என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.02.2025 புதன்கிழமை



# இணுவில் கந்தனுக்கு நேற்று உலகப்பெருமஞ்ச திருப்பவனி

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி கோவிலின் தைப் பூசப் பெருமஞ்சத் திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை இரவு ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் மிகவும் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

நேற்று மாலை 6.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழி பாடுகள் மற்றும் சண்முகார்ச்சனையைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராய் எழுந்தருளி இரவு 7.45 மணியளவில் நூற்றாண்டு பழமை வாய்ந்த உலகப் பெரு மஞ்சத்தில் ஆரோகணித்தார்.

சிறப்புத் தீபாராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்க இரவு 8.15 மணியளவில் மின்வி ளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்ச திருப்பவனி ஆரம்பமாகியது.

(ம-66)




## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- பலாலி றோட் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300m
- பலாலி-புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து
- சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல் வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

**தொடர்பு: 077 623 4204 076 755 8606**

## வேலையாட்கள் தேவை

கல்வியங்காட்டில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்)

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு விநியோகஸ்தர் (Delivery)

தொடர்பு: 076 982 7517


கோண்டாவில் கிழக்கு ஸ்ரீமகாகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் கடந்த ஞாயிற் றுக்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்தி பூர்வமாக நடைபெற்றது. (ம-66)

## மரண அறிவித்தல்

மலர்வு 05 . 12 . 1945



உதிர்வு 09 . 02 . 2025

### சியாமளாதேவி ஆறுமுகம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட சியாமளாதேவி ஆறுமுகம் அவர்கள் கடந்த 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - வீரம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் பாசமிகு மனைவியும், சுகந்தன் (கனடா), கஜந்தன் (பிரான்ஸ்), சுபாஜினி, யாழினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சித்த மத்திய மருந்தகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஜா (கனடா), குகேந்தினி (திருகோணமலை), மாதவன் (கொழும்பு), ஈஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பவுஷனா, மதுஷிகன், கிருத்திக்சாய் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் தெல்லிப்பளை கொற்றாவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**சுகந்தன் (மகன் - கனடா)** - 001 416 725 5954
**கஜந்தன் (மகன் - பிரான்ஸ்)** - 0033 768 665 983
**சுபாஜினி (மகள்)** - 077 990 6264
**யாழினி (மகள்)** - 076 467 3398

(CS/57486) J-1

**தகவல் : குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 04 . 1944



மறைவு 10 . 02 . 2025

### ஆறுமுகம் பஞ்சாட்சரம்

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு பழனியாண்டவர் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பஞ்சாட்சரம் நேற்றுமுன்தினம் (10.02.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும், பகிரங்கன், தனரங்கன் கிருபரங்கன் அருள்ரங்கன் தயாழினி, இராஜரங்கன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சற்குணவதியின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற சாம்பசிவத்தின் அன்பு மைத்துனரும், கவிதா, சசிகரன், இதயவேணி, மகாபவானி, மயூரா, சண்முகப்பிரியா, ரஜீவன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜானன், விதுர்ஷனா, ஜெசிகரன் மோதிலன், நடீஷ், நிதிஷ், கஜலக்ஷ்மன், கிசானி, லிசானி, யாத்விகா, இனியா, இசையா, அட்சரன், வினுஷ், ஆதித் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2025) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

கிருபரங்கன் - 077 364 3899, 021 492 1700, 077 170 5134
பகிரங்கன் - +44 783 267 7225, அருள்ரங்கன் - +134 795 47103
தனரங்கன் - 077 169 8165, தயாழினி - +16 473 890 015

**பழனியாண்டவர் கோவில் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

(CS/57484) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.02. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org